செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-ருஅ தி. வ. ஆண்டு-உ0கச. மார்கழி பரல்-ரு

சனவரி 1984

“செந்தமிழ்ச் செல்வி”

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

௧. முனைவர் ச. வே. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை.

௨. முனைவர் தமிழண்ணல், பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

௩. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

௪. முனைவர் பொன் சௌரிராசன், தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

௫ முனைவர் பொன் கோதண்டராமன், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

௬. முனைவர் கு. பரமசிவம், எம். ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

௭. பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

௮. முனைவர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ.,டிப்.லிங்., பிஎச்.டி.,
மயிலாடுதுறை.

௯. கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

௧௦. முனைவர் வீ. ப. கா. சுந்தரம், தமிழியல்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

நிறுவனர்: தாமரைச்செல்வர் வ. சுப்பையா.

ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிட்.

உள்ளுறை

	பக்கம்
அரப்பா காலப் பண்பாடு	௧௬௧
ஆய்தமும் ஆயுதமும்	௧௬௪
பாரதியின் புதிய ஆத்திசூடியில் சமுதாய விழிப்புணர்வு	௧௬௭
கடியன்	௧௭௧
பூம்புகார் கடலில் புதையுண்ட அழகம்மை	௧௭௪
‘ ஓடி வா ’	௧௭௬
பிறந்து வளரும் பெரிய பணி	௧௭௭
இந்தப் பொங்கல்.........!	௧௮௫
தொல்காப்பியமும் விகுதிகளும்	௧௮௪
முழையூர் கோயில் மாடக் கோயிலா ?	௧௮௬
சிதம்பர இரகுநாதன் அவர்கட்கு சாகித்ய அகாடமி விருது	௨௦௪
செய்திகள்	௨௦௫
மதிப்புரை	௨௦௭

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-ருஅ தி. வ. ஆண்டு உ0கசு, மார்கழி பரல்-ரு

சனவரி 1984

அரப்பா காலப் பண்பாடு

இந்திய நாட்டின் பழம்பெரும் பண்பாட்டை உணர்த்தி நிற்பவை அரப்பா மொகஞ்சதரோ அழிபாடுகள். அப் பகுதிகளில் நிலவிவந்த பண்பாடு திராவிடருடையதா அல்லது ஆரியருடையதா என்ற ஆய்வு கடந்த அரை நூற்றுண்டுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. பெரும்பாலும் திராவிடப் பண்பாட்டை எடுத்துக் காட்டுவனவே அந்த அழிபாடுகள் என்ற கருத்திருந்தாலும் இன்னும் அது முழுமையாக நிறுவப்பெறவில்லை.

குறிப்பாக அங்குக் கிடைத்த முத்திரைகள் தாங்கியிருக்கும் வரிவடிவங்களைப்பற்றிய ஆய்வு இந்தியா, ருசியா, பின்லாந்து போன்ற நாடுகளில் நடைபெற்று வருகினறது. அவை பழங்காலத் திராவிடமொழி வரிவடிவங்களே என்று பெரும்பாலோராலும் ஒத்துக்கொள்ளப்பெற்றுள்ளன. ஆனுல் அவற்றை இப்படித்தான் படிக்கவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாத சூழ்நிலை இன்னும் உள்ளது.

இவ்வாய்வில் ஈடுபட்டுள்ள பின்லாந்து நாட்டினரான டாக்டர் அசுகோ பர்போலா அண்மையில் அரப்பாவில் கிடைத்த முத்திரை யொன்றைப்பற்றிய புதிய கருத்தினை வெளியிட்டுள்ளார். சிவபெருமான் தவநிலையில் அமர்ந்திருப்பது போன்ற ஒரு முத்திரையின் படத்தைப் பலரும் பார்த்திருப்பர். அம் முத்திரையில் தலைப்பகுதியில் வலப்பக்கம் சற்று உடைந்திருக்கும். அதனுல் அது மிகப் பொருத்தமாகச் சிவனின் தோற்றத்தையே உணர்த்தி நிற்கும். ஏனெனில் உடையாத இடப்பகுதியில் சிவனின் தலையில் பிறை யொன்று இருப்பது தெளிவாகத் தெரியும். இதுவரை பலர் இவ்வாறு கருதிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் இம் முத்திரைக்குப் புதிய விளக்கம் ஒன்றைப் பர்போலா கொடுத்துள்ளார்.

அம் முத்திரையில் காணப்படுவது ஆண் பெண் உருவமன்று. நீர்வாழ் எருமையொன்று தன் பின்கால்கள் இரண்டையும் தவ நிலையில் உட்காருவதுபோல் மடக்கி முன்கால்கள் இரண்டையும் கைகள்போல் தூக்கிக்கொண்டு அமர்ந்திருக்கிறது. தலையில் பிறை போல் காணப்படுவது அதன் ஒரு பக்கக் கொம்பு. உடைந்துபோன வலப்பக்கப் பகுதி கிடைத்தால் அதில் வலப்பக்கக் கொம்பையும் காணலாம் என்று தெரிவித்துள்ளார். இது முற்றிலும் புதிய கருத்தாகத் தோன்றினும் சிந்திக்கவேண்டிய ஒன்ருகும்.

தாம் இவ்வாறு கூறுவதற்குச் சான்ருக இதையொத்த சுமேரிய, எலமிய முத்திரைகள் சிலவற்றை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். மெசபொடோமியாவில் நிலவிவந்த சுமேரியப் பண்பாடும் தென் ஈரான் பகுதியில் நிலவிவந்த எலமியப் பண்பாடும் திராவிடப் பண்பாட்டைப்போலவே கி. மு. 3000 முதல் 4000 ஆண்டுகள் பழமையானவை. அமெரிக்கப் பேரறிஞரான டேவிட் மகால்பின் எலமியமொழி-திராவிடமொழி உறவைப்பற்றிச் சான்று காட்டி மதுரையில் நடைபெற்ற 5ஆம் உலகத்தமிழ் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை படித்தார்.

சுமேரிய, எலமிய முத்திரைகளில் எருது ஒன்று தன் பின் கால்களை மடக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பது போன்ற உருவங்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. இம் முத்திரைகளில் ஏன் எருது வடிவம் பொறிக்கப்பெற்றது என்பதை ஆயும்போது மேலும் பல புதிய செய்திகள் கிடைப்பதாகப் பர்போலா தெரிவிக்கிருர்.

சுமேரிய, எலமிய முத்திரைகளில் எருதும் சிங்கமும் ஒன்றை யொன்று தாக்குவதுபோலக் காணப்படுகின்றன. அரப்பா முத்திரைகளில் எருமையும் புலியும் அதே நிலையில் காணப்பெறு கின்றன. வியக்கத்தக்க வகையில் ஒருசில முத்திரைகள் புதிய நிலைகளைக் காட்டுகின்றன. அரப்பா முத்திரைகள் எருமை, புலியின் வாலைப்பிடித்து முறுக்குவதுபோல் காட்டுகின்றன. அதேபோன்று சுமேரிய, எலமிய முத்திரைகளில் எருது சிங்கத்தின் வாலைப்பிடித்து முறுக்கி வெற்றிகொள்வதுபோல் காணப்படுகிறது. இவை தொடர்பாகவே எருதும் எருமையும் தவநிலையில் இருப்பதுபோல் காட்டும் முத்திரைகளும் உள்ளன.

இம் முத்திரைகளில் எருது/எருமை, சிங்கம்/புலி ஆகியவை ஏன் பயன்படுத்தப்பெற்றன என்பதைப் பர்போலா ஆய்ந்துள்ளார். அவை எவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன என்றும் அவர் ஆய்ந்துள்ளார். அவர் கருத்தின்படி எருது/எருமை ஆகியவை இரவு அல்லது மழைக்காலத்தையும் சிங்கம்/புலி ஆகியவை பகல்

அல்லது வேனிற்காலத்தையும் குறிக்கலாம் என்பதாகும். எருது/ எருமை ஆகிய இரண்டும் நீரில் மூழ்கிக்கிடக்கும் இயல்புடையவை யாதலால் அவற்றிற்குத் தொடர்புடைய நீர்வாழ் இனங்களான மீன், முதலை ஆகியவற்றின் உருவங்கள் சுமேரிய, அரப்பா சின்னங்களில் பொறிக்கப்பெற்றுள்ளன. சில முத்திரைகளில் நெற்பயிரின் கதிர் பொறிக்கப்பெற்றுள்ளதால் அதற்குதவும் மழைக்காலத்தையும் அவை குறிக்கலாம் என்று கருதுகிறார்.

சில முத்திரைகளில் ஆண், பெண் உருவங்கள் சிங்கம், புலி ஆகியவற்றின்மீது நின்றுகொண்டு எருது, எருமை ஆகியவற்றை அடக்குவதுபோல் காணப்படுகின்றன. இவ் ஆண், பெண் உருவங்கள் இருகைகளாலும் இருபக்கம் இரண்டு பாம்புகளைக் கழுத்தில் பிடித்து அடக்குவதுபோன்றும் காணப்படுகின்றன. சுமேரியா, அரப்பா முத்திரைகளில் இவை ஒத்துக் காணப்படுவது வியப்பைத் தருகிறது.

தொலைவிலிருந்த இருவேறு நாடுகளில் இருவேறுபட்ட பண்பாடுகள் நிலவிய சூழலில் இத்தகைய ஒத்த கருத்துகளையுடைய முத்திரைகள் எவ்வாறு உருவாகியிருக்கமுடியும் என்று ஆய்ந்த அறிஞர் பர்போலா திராவிடப் பண்பாட்டின் தாக்கம் சுமேரிய, எலமியப் பண்பாடுகளில் இருந்தமையே என்று கருதுகிறார்.

திராவிடப் பண்பாட்டின் பழமையைப்பற்றி ஆய்வதைத் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டுள்ள அறிஞர் பர்போலாவின் ஆய்வுகள் பலவகையான புதிய கண்டுபிடிப்புகளை அவ்வப்போது தொடர்ந்து வெளியிட்டுவருவதைப் பார்க்கும்போது அவருடைய விடாமுயற்சியைப் பாராட்டவேண்டியுள்ளது. அறிஞர் ஐராவதம் மகாதேவன் போன்ற ஓரிருவரைத் தவிரத் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ், வரலாறு போன்ற துறைகளில் பணியாற்று வோர் எவரும் இத்தகைய உயர்மட்ட ஆய்வில் தொடர்ந்து ஆயவில்லையே என்பது கவலைக்குரியதாகவுள்ளது. தமிழரின் தொன்மையைப்பற்றிய ஆய்வில் அவர்கள் ஈடுபடுவது மொழிக்கும் இனத்திற்கும் ஆற்றும் பெருந்தொண்டாக அமையும்.

———

சமயம்

என் நாடு இந்த உலகம்; மனித வகுப்பினர் என் குடும்பம்; நன்மை செய்வதே என் சமயம்.

—தாமஸ் பெய்ன்

ஆய்தமும் ஆயுதமும்

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

ஆய்தம் என்பது ஓர் எழுத்து. ஆயுதம் என்பது கருவி. ஆய்தமும் ஆயுதமும் வெவ்வேறு சொற்கள்; வெவ்வேறு பொருள் தருவன. ஆனால் இரண்டையும் வேறுபாடு இல்லாமல் எழுதும் வழக்கம், தொடக்கக் கல்வியாளரிடத்தேயன்றி வளர்ந்தோரிடம் கூட உள்ளது. ஆய்தத்தை ஆயுதமாகவும், ஆயுதத்தை ஆய்தமாக வும் எழுதுவது அன்றி, இரண்டையும் 'ஆயுதம்' என்று எழுதுவதும் வழக்கில் ஊன்றியுள்ளது.

'ஆய்தம்' பழந்தமிழ்ச் சொல்: ஆய்தஇறுதி, ஆய்தத்தொடர், ஆய்தப்புள்ளி, ஆய்தப்பெயர் ஆய்தபகரம், ஆய்தம் என்பன தொல் காப்பியத்தில் பயில வழங்குவன. 'ஆயுதம்' என்பதோ வடசொல்; சங்க நூல்களிலும் சங்கஞ் சார்ந்த நூல்களிலும் வாராத சொல். பிற்காலத்துப் புகுந்து, பெருக்கமாக வழங்கப் பெறும் சொல். சான்று, 'ஆயுதபூசை'.

பழங்காலத்தில் போர்க்கருவிகள் 'படைக்கலங்கள்' எனப் பெற்றன. படைக்கருவிகள் வைக்கப்பெற்ற இடங்கள் 'படைக்கலக் கொட்டில்கள்' எனப்பெற்றன. 'படை' என்னும் சொல் படையை யும் படைக்கலத்தையும் குறித்து. பின்னுளில் படையும், படைக் கலமும் 'ஆயுதம்' ஆயின. படைக்கலக்கொட்டில் 'ஆயுதசாலை' ஆயிற்று. படைக்கலவழிபாடு, 'ஆயுதபூசை'யாயிற்று! வேற் கோட்டமே 'படைவீடு' என்பதையும் அறிக!

அறியார், 'ஆயுத' 'ஆய்த' வேறுபாடு அறியாமல் எழுதினர் என விடலாம். அறிந்தவர்களும் ஏன் அப்படி எழுதினர்?

ஆய்த எழுத்தின் வடிவத்தை 'முப்பாற்புள்ளி' என்றூர் தொல்காப்பியர் (2), 'ஆய்தப் புள்ளி' என்றும் சுட்டினுர் (423), முப்புள்ளி வடிவை விளக்கக், 'கேடயம்' (மெய்மறை) என்னும் கருவியை உவமை காட்டினர் சிலர். கேடயத்தில் மூன்று வட்டங்கள் உண்டு. ஆகலின், வடிவ உவமைகூற அது வாய்ப்பாக இருந்தது! அக் கேடயம் அது போன்ற அமைப்புடைய எழுத்தைக் குறிக்கும் எனக் கொண்டு, கேடயம் ஓர் ஆயுதம் ஆகலின், ஆய்த எழுத்தை 'ஆயுதம்' எனக் காரணம் காட்டினர்! கேடயத்தை மட்டுமா உவமை காட்டினர் ஆய்தத்திற்கு?

'அடுப்புக் கூட்டுப்போல்வதோர் எழுத்து' என்று உவமை கூறினர். அடுப்புக் கூட்டும் 'ஆயுதம்' தானே? 'சமையல் செய் தற்குக் கருவியாம் ஆகலின் பொருந்தும்' என்று பொருத்தம் காட்டவும் துணிவர்போலும்! இனி, இறைவன் முக்கண்ணை ஆய்த எழுத்து வடிவுக்கு உவமை காட்டினர்! ''வன்ன ஆய்தம்நேர் நாட்ட முற்ற வள்ளல்'' என்பது தணிகைப்புராணம் (நைமி. 6). ''மெய்யா ரணங்கள் தடவிய ஆய்த விழியினர்'' என்பது பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலை (2). இறைவன் முக்கண்ணும் ஆயுதம் தானே ?

ஆய்த எழுத்தின் வடிவத்தை வீரமா முனிவர்தாம் அமைத் தாராம். அமைத்தது மட்டுமா? அதனால் தமிழைக் கெடுத்து விட்டாராம் எப்படி? ''உயிர் எழுத்துக்களின் முடிவில் அடுப்புக் கட்டிகளைப்போல 3 புள்ளிகளைக் குறித்து அதுதான் ஆயுத எழுத்து என்றும் சொல்லிவிட்டார். அதுதான் அவர் செய்த பெரும் தவறு.''

இப்படிச் சொல்பவர் யார்? அவரே சொல்கிறார்: ''ராமலிங்கம் என்கிற தமிழ் அறிஞர் சுமார் 40 ஆண்டுகளாகத் தொல்காப்பியத் தைச் சிறப்பாக ஆராய்ச்சி செய்துவருகிறார். அவருடைய உதவி யால் தொல்காப்பிய நூலைத் தெளிவாகப் படித்து 'சத்தியகங்கை'யில் சுமார் 30 கட்டுரைகள் எழுதினேன்'' என்கிறார். இதைச் சொல்பவர் சத்திய கங்கை ஆசிரியர் திரு. பகீரதனார்தாம். 6-8-'81 குமுதம் இதழில், ''வீரமாமுனிவரால்தான் தமிழ் கெட்டது'' என்னும் தலைப்பில் அவர் தந்த 'பேட்டி' வெளியாயிற்று!

''பயமில்லாமல் சொல்கிறேன். வீரமாமுனிவர் காலத்தில் இருந்து இந்தக் காலம்வரைக்கும் தமிழ்ப் புலவர்கள்தான் தமிழர் களின் வளர்ச்சியைக் கெடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்று அவர் மேலும் கூறுவது அருமையான கண்டுபிடிப்பு! தம் அருமை ஆசிரியருக்கு அன்பு மாணவர் வழங்கிய நன்றிப்படையல் இதற்கு மேலும் வேண்டுமோ?

'பகீரதர்' குற்றச்சாட்டை மறுக்கவந்தது அன்று இக் கட்டுரை. அவர் இப்'பேட்டி'யுரையில் ஆறு இடங்களில் 'ஆய்தம்' பற்றிக் குறிப்பிடுகிறார். ஆறு இடங்களிலும், 'ஆயுதம்' தான் உள்ளது. ஆய்தமே இல்லை! 'பேட்டி'தானே எனலாம்! எழுதியவர் தவறு எனலாம்!

இதழில் வருமுன் பேட்டிச் செய்தியைப் படித்துப் பார்த் திருப்பார்; பார்த்திருக்க வேண்டும்; அப்பொழுது பார்க்கவில்லை. எனினும், வெளிவந்த பின்னராவது, 'ஆய்தம்' என்று திருத்தம் தந்திருக்க வேண்டுமே! அவர்தாம் 'ஆயுதக்காரர்' ஆயினரே!

வீரமாமுனிவர் தாம் ஆய்தத்திற்கு மூன்று புள்ளி வடிவு தந்தாரா? வீரமாமுனிவர், உரையாசிரியர் நச்சினுர்க்கினியருக்கு முந்தியவரா பிந்தியவரா என்பதை நன்கு அறிவார் சத்திய கங்கையார். அவர் (நச்சினுர்க்கினியர்) சொல்கிறுர் :

''ஆய்தம் என்ற ஓசைதான், அடுப்புக்கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு 'ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' என்ருர். அதனை இக்காலத்தார் நடுவாங்கியிட்டெழுதுப. இதற்கு வரிவடிவு கூறினு'' என்ருர்.

ஆய்வுடையார், ஆய்த முப்பாற்புள்ளி வடிவை வீரமாமுனிவர் மேல் ஏற்றுவரோ?

இனி, ஆய்தம் என்பதன் பொருள் என்ன? ஆசிரியர் தொல் காப்பியனுரே ஆய்தம் என்பதன் பொருள் 'உள்ளதன் நுணுக்கம்' என்று கூறியுள்ளார். ''ஆய்தல் = நுணுகுதல். ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம் என்ருர் தொல்காப்பியனுரும்'' என்ருர் சிவஞானமுனிவர். (சிவஞானபாடி. 7 : 3)

தமிழ்மொழியில் வழங்கப்பெறும் எழுத்தொலிகள் எல்லா வற்றினும் ஆய்தம் நுணுகிய ஒலியுடையது என்பது விளங்க 'உள்ளதன் நுணுக்கம்' என்ருர் ஆசிரியர். ஆய்வு, ஆராய்வு என்பனவும் நுணுக்கப் பொருள்வழிவந்த சொற்களே!

ஆயுதம், ''கருவி, கூத்துப்பயிலிடம், படைக்கலம்'' என்னும் முப் பொருள்களைத் தர, ஆய்தல் என்பது ''ஆராய்தல், காய் முதலியவை களைப் பிரித்தெடுத்தல், தெரிதல், தெரிந்தெடுத்தல், நுண்மை, முன்னுள்ளதனிற் சிறியதாதல், வருந்துதல், அழகமைதல், அசைதல், சோதனை செய்தல், கொண்டாடுதல், கொய்தல், காம்பு களைதல், நுழைந்து பார்த்தல்'' என்னும் பதினுன்கு பொருள்களைத் தருதல் தமிழ்ச் சொல்லகராதி வழியே அறிக. ஆய்த எழுத்தை மரபும் பொருள்நிலையும் கருதி 'ஆய்தம்' என்றே எழுதுக! ''மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்'' என்பது தொல்காப்பியர் துணிவு!

வையத்துக்கு ஒன்று!

வானுக்குச் செங்கதிர் ஒன்று—புனல்
வண்மைக்குக் காவிரி ஒன்று—நல்ல
மானத்தைக் காத்து வாழ எண்ணும்—இந்த
வையத்துக் கொன்று திருக்குறள்

—பாவேந்தர் பாரதிதாசன்

பாரதியின் புதிய ஆத்திசூடியில் சமுதாய விழிப்புணர்வு

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

(முன் இதழ் கசஉஆம் பக்கத் தொடர்ச்சி)

புதியன விரும்ப ஆணையிடல் :

பாரதியின் ஆத்திசூடியே புதுமை வேட்கையின் விளைவாகத் திகழ்கின்றமை தெளிவு. ஔவை மூதாட்டி 'ஆறுவது சினம்' என்றால், பாரதி 'ரௌத்திரம் பழகு' என்று சிறுமை கண்டு சினம் கொள்ளச் சொல்கின்றான். ஔவை 'தையல் சொற் கேளேல்' என்றால், பாரதி 'தையலை உயர்வு செய்' என்று விதியைமாற்று கின்றான். 'போர்த்தொழில்புரியேல்' என்றும், 'முனைமுகத்து நில்லேல்' என்றும் போராட்ட உணர்வுக்கு ஔவை மூதாட்டி முற்றுப் புள்ளி வைத்தாள் ; பாரதியோ 'முனை முகத்து நில்' என்று போரில் முனையிடத்தே நில் என்றான். அதுமட்டுமோ ? வெளிப் படையாகவே 'போர்த்தொழில் பழகு !' என்று போராட்டத்திற்குச் சமுதாயத்தை ஆற்றுப்படுத்துகின்றான். மூதாட்டி 'மீ தூண் விரும்பேல்' என்று உணவைச் சுருக்குமாறு அறிவுரை கூற, பாரதியோ 'ஊண்மிக விரும்பு' என்று பாரத சமுதாயத்திற்கு நெறி காட்டுகின்றான். இத்தனையும் கால மாறுதலுக்கேற்ப—நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கேற்ப—மாற்றானுக்கு அடிமைப்பட்டிருந்த மக்களின் எழுச்சிக்கேற்ப—பாரதி செய்துள்ள புதுமைகள். இது மட்டுமோ ? 'வேதம் புதுமை செய்' என்று வேதத்தையே காலத்துக் கேற்பப் புதுமை செய்ய வேண்டும் எனப் பாடுகின்றான். ஆகவே புதுயுகப் புலவனுக்குப் 'புதியன விரும்பு !' என்பது வழிகாட்டும் வாய்மைச் சூத்திரமாக அமைந்திடுகின்றது.

உடல்நலம் காக்கும் திறன்

உடம்பைப் பொய்யென்று கூறும் வாதம் சமுதாயத்தில் வேர் விட்டிருந்த காலத்தில், பாரதி ஆத்திசூடியில் பாடுகின்றான் ''உடலினை உறுதி செய்?'' என்று, ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'', ''உடலார் அழியில் உயிரார் அழிவர்'' என்றெல் லாம் திருமூலர் உடலினைப் பேணிக்காக்கும் சித்தர் நெறியைக் காட்டினார் ; அவர்கள் வழியில் வந்தவனன்றோ பாரதி ! உடம்பை

நன்கு வலியுடையதாக்குதல் வேண்டும் என்பது பாரதிக் கோட்பாடு. ஆரோக்கியமான உடம்பே உறுதியான கொள்கைப் பிடிப்பிற்கு இட மளிக்கும் என்று ஆழ்ந்து நம்புகின்றான். மெலிந்த உடலோடு, குழிந்தாழ்ந்த நடையோடு, வளமிழந்த வாழ்வுடைய சமுதாயத்தை நோக்கி உறுதியாக—துணிவாக அவன் குரல் கொடுக்கின்றான், ''உடலினை உறுதி செய்!'' என்று; அதுமட்டுமின்றி ''இளைத்தல் இகழ்ச்சி'' என்று காரணமும் காட்டுகின்றான். ''ஐம்பொறி ஆட்சி கொள்!'' என்று ஐம்பொறிகளையும் அடக்கி ஆள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றான். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் பாரதி எதற்கெடுத்தாலும் 'மருந்து' 'மருந்து' என்று தேடி அலையும் மாந்தர்க்குத் தக்க அறிவுரை பகர்கின்றான். இன்று நம்மிற் பலர்க்கு இந்த நோய் பரவியுள்ளது; சிறிது வயிறு வலித்தாலும் போதும், கண்களைச் சிறிது சோர்வு வந்து கவ்வினாலும் போதும், மருந்து தேடி ஓடுவதே இந்தப் புதிய நோய்; இயற்கை நெறியில் வாழ்ந்தால், தக்கவற்றை உண்டு, தக்க ஒழுக்கத்துடன் தக்க வண்ணம் வாழ்ந்தால் மருந்துகள் இல்லாம லேயே மாண்புடன் வாழலாம். ''முன்னே உண்ட உணவு செரித்த பிறகு அடுத்த வேளை உணவு உண்பது என்று வழக்கப்படுத்திக் கொண்டாலே போதும்; மருந்து என்று ஒன்று தேவையேயில்லை' என்ற பொருள்பட வள்ளுவன் உரைத்த வாய்மொழியே இங்கு நினைவில் எழுகின்றது:

> ''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்தியது
> அற்றது போற்றி உணின்''

இந்த நெறி காப்பதே ''ஔடதம் குறை!'' என்ற பாரதி வாசகம்.

இவ்வாறு உடல் நலம் காப்பது நன்று என்று நெறி காட்டிய வன் சோம்பியிருத்தலே தீது என்று கண்டிக்கின்றான்; ''நாளெலாம் வினை செய்!'' என்று, ஏதாவது பயன் உடைய செயலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதே உடம்பின் பயன் என்று குறிப்பாக உணர்த்தி விடு கின்றான். ''மூப்பினுக்கு இடங் கொடேல்'' என்பது மற்றொரு மணி மொழி. இடைவிடாத உழைப்பினாலும், சோர்வின்மையாலும் முதுமையை வென்றிட வேண்டும்; அதுவே சக்தியைப் பெருக்கி இன்புற்று வாழும் தகுதியை உண்டாக்கும் என்பது நம் கவிஞனின் உறுதியான நம்பிக்கை.

> ''தேடிச் சோறு நிதம் தின்று—பல
> சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
> வாடித் துன்பம் மிக உழன்று—பிறர்
> வாடப் பலசெயல்கள் செய்து—நரை

கூடிக் கிழப்பருவம் எய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நானும்
வீழ்வேன் என்றுநினைத் தாயோ ?''

என்று கேட்கும் பாரதி, சக்தியிடம் யோகசித்தியை அவாவி நிற்கின்ற அறிவுத் தெளிவுடையவன் :

''தோளை வலியுடையதாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டுபிளந் தாலும்—கட்டு
மாறு உடலுறுதி தந்து—சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித் திகழுமுகந் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறித்—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்''

என உடலுறுதி வேண்டுகின்ற பெருங்கவிஞன். இந்த உடல் பொய்யானது என்ற கொள்கை பாரதிக்குப் பிடிக்காது; இந்த உடலை நன்கு பேணுதல் வேண்டும் என்ற கோட்பாட்டில் பாரதிக்குப் பிடிப்பு அதிகம். உடல் பொய் என்ற கருத்துச் சமுதாயத்தின் விழிப்புணர்வை—உழைக்கும் திறனை—நாட்டிற்குப் பணிபுரியும் ஆற்றலைத் தடுத்துவிடும் என்ற கருத்து இப் புதுயுகக் கவிஞனுக்கு அழுத்தமாக உள்ளது :

''இந்த உலகமே பொய் என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கி வருகிறது. சந்யாசிகள் இதை ஓயாமல் சொல்லிக்கொண் டிருக்கட்டும்; அதைப்பற்றி இந்த நிமிஷத்தில் எனக்கு வருத்த மில்லை. குடும்பத்தில் இருப்போர்க்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல் அன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப் போன வீடும் வயலும் பொய்யா? தங்கச்சிலை போலே நிற்கிறாள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குல தெய்வம் பொய்யா?''

என்று எழுதிக்கொண்டு போகும் பாரதிக்கு, உடலைப் பொய் என்றும், உலகைப் பொய் என்றும் கூறும் கொள்கைகள் கசக் கின்றன. உலகை, உடலை மெய்யாகக் கண்டு கருதி வாழ்ந்து சமுதாயப் பணிகளை உறுதிப்படச் செய்தலையே பாரதிமனம் நாடு கின்றது.

சோதிடமெய்ம்மை :

சமுதாயக் கேடுகளில் ஒன்று எதற்கெடுத்தாலும் மருந்துகளைத் தேடி ஓடுவது என்றால், தம் உழைப்பையும் கரங்களையும் முயற்சியையும் நம்பாமல், எதற்கெடுத்தாலும் சோதிடரை நாடி ஓடுவது மற்றொன்று; பாரத நாட்டின் அக்கால மாந்தர்க்கு உழைப்பில் இருந்த நம்பிக்கையைவிடச் சோதிடத்தின்மீது இருந்த நம்பிக்கை ஆழமும் உரமும் உடையதாக இருந்தது. சோதிட நூலை நம்புவதிலோ அறிவதிலோ நம் கவிஞனுக்குப் பெருவிருப்பம் இல்லை என்று கூறிவிடமுடியாது; ''வானநூற் பயிற்சி கொள்!'' என்று பாடியவன் அவன்; சோதிடத்தைக் கூறிக்கொண்டே சோம்பிக்கிடந்த மக்களது துயிலைக் களைந்தான் அவன்; · ''சோதிடம் தனை இகழ்!'' என்ற ஆத்திசூடி வாசகத்தின் பொருளமைதி இதுவேயாகும். தம்முடைய தவறுகளுக்கும், தோல்விகளுக்கும் சோதிடத்தில் காரணங்கள் தேடியும், காரணங்கள் கற்பித்தும், கடின உழைப்பைக் கைவிடுவோர் திருந்துதற்கு இந்த மணிமொழி துணைநிற்கும் என்பதில் ஐயமும் உண்டோ?

முடிவுரை :

இவ்வாறு, பாரதியின் ஆத்திசூடியின் நூற்றுப்பத்து வாசகங்களும் துயர் துடைக்கும் நெறி காட்டுவனவாக—சமுதாய விழிப்புணர்வுக்கு விதையிட்டுக் காக்கும் ஞானவேலிகளாக—சிந்திக்க வைக்கும் கொள்கைப் பெட்டகங்களாக அமைந்துள்ளன. ஆத்திசூடி அரிச்சுவடி இலக்கியம் அன்று; கொள்கை இலக்கியம் என்று துணியவைக்கிறது பாரதியின் படைப்பு. சிந்தனைக் களத்தில் நின்று, கவிதைச் சம்மட்டியால் கவிஞன் சமுதாய நன்மைகருதித் தொழிற்பட்டபோது தெறித்துவிழுந்த தீப்பொறிகளைப்போல இதன் சொற்கள் தெறித்து விழுகின்றன. தோன்றிய காலத்தும் சரி—இன்று சிந்திக்கும் நேரத்தும் சரி—பாரதியை ஊடுருவிப்பார்க்கும் பார்வைக்கு, அவனது சமுதாய விழிப்புணர்வை உணரும் நோக்கிற்கு இச் சிற்றிலக்கியம் துணைபுரிகின்றது என்பது இவ்விலக்கிய ஆய்வினால் வெளிப்படும் உண்மை; விழுமிய உண்மை. ''பாரதி கோடைக்காலத்து மழைபோல்வானல்லன்; பருவ மாரி. குன்றின் மீதும் சமவெளி ஆற்றின் பெருக்கிலும், பள்ளத்தாக்கிலும் வரையாது பெய்த பெருவெள்ளம்; பொய்யாத பெருமழை'' (''Bharati is not a summer cloud, but the first expression and descent of the monsoon itself, scattering its plenty over land river, over hill and dale'') என்ற மதிப்பீடு பாரதியின் ஏனைய பாடல்களைப் போன்றே அவன் படைத்த ஆத்திசூடிக்கும் பொருந்தும்; ஆம்; அது புதியது; பொருளாழமிக்கது; அவனது கொள்கை இலக்கியமாக நின்று பொலிவூட்டுவது என்பது மாறாத உண்மை !

‘கடியன்’

[பி. எல். சாமி, இ. ஆ. ப.]

1971ஆம் ஆண்டில் பறவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து வரும் பம்பாய் இயற்கையியல் கழகத்தார் (Bombay Natural History Society) கோடிக்கரையில் (Pointcalimere) பறவைகளை வலைபோட்டுப் பிடித்து ஆராய்ந்து வந்தனர். சைபீரியா போன்ற பல தொலைவான வெளிநாடுகளிலிருந்து வந்த பறவைகளைப் பிடித்து அவைகளின் கால்களில் இருந்த வளையங்களில் காணும் செய்தி களிலிருந்து வலசை வந்த பறவைகள் எங்கிருந்து வந்தன, எப்போது கிளம்பின என்பதையெல்லாம் கண்டு ஆராய்ந்தனர். உருசியாவி லுள்ள சைபீரியா முதலிய மிகத் தொலைவான நாடுகளிலிருந்துகூட மைனா அளவுள்ள சிறிய பறவைகளிலிருந்து காக்கை போன்ற அள வுள்ள பெரிய பறவைகள்வரை உருசியா, ஐரோப்பா ஆகிய தொலை தூர நாடுகளிலிருந்து கோடிக்கரைக்கு வலசை வருவது கண்டு பிடிக்கப்பட்டது. வலைகளில் பிடித்த வலசை போகும் பறவைகளுக்குக் காலில் வளையம் போட்டு விட்டுவிடுவர். அவை வெளிநாடுகட்கு வலசை போகும். உருசியாவிலிருந்து வந்த ஒரு பறவையின் காலில் இத்தகைய ஒரு வளையம் காரைக்காலில் கிடைத்தது. அது பம்பாயில் இயங்கிவரும் இயற்கையியல் கழகத்தாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வலசை போகாத உள்நாட்டுப் பறவைகளும் வலைகளில் பிடி படும். நான் கோடிக்கரையில் பறவைகளைக் கண்டு ஆராயச் சென்றபோது ‘கடியன்’ என்றொரு பறவையைப் பாமர மக்கள் அழைத்ததைக் கேட்டுள்ளேன். இப் பறவையை நான் ஆறுவது வகுப்புப் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது கண்டுள்ளேன். ஒரு தடவை இப் பறவையின் இரு குஞ்சுகள் மரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டன. இந்தக் குஞ்சுகளை ஓர் இரும்புக் கம்பிக் கூண்டுக்குள் வைத்து வீட்டில் வளர்க்க முயன்றேன. ஆனால் இப் பறவைகள் வெட்டுக்கிளி போன்ற பூச்சிகளைப் பிடித்து உண்ணும் என்று கேள்விப்பட்டு இப் பறவைகளை நீண்ட காலம் வளர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டது. கூட்டிலிருந்த பறவைக் குஞ்சுகளை எங்கள் வீட்டிலுள்ள முருங்கை மரத்தடியில் நிழலில் வைத்தேன். அப்போது, கொடுக்காப்புளி மரத்திலிருந்து இக் குஞ்சுகளின் தாய் தந்தையர் எப்படியோ தங்களது குஞ்சுகளை இனங்கண்டு கூட்டிலுள்ள கம்பிகளின் சந்துகளின் வழியாக வெட்டுக்கிளி முதலிய பூச்சிகளைப்

பிடித்து வந்து பல தடவை குஞ்சுகளுக்கு ஊட்டின. தீற்றின. குஞ்சுகள் பறக்கும் நிலையை அடைந்ததும் கூட்டிலிருந்து விடுதலை ஆக்கிப் பறக்கவிட்டேன்.

சிறுவனாயிருந்தபோது இப் பறவையின் பெயரைத் தெரிந்து கொள்ளப் பலரை உசாவினேன். அதன் பெயர் தெரியவில்லை. குருவிக்காரர்கள் என்றழைக்கப்படும் பழங்குடி மக்களான நரிக் குறவர்களை உசாவியபோது இப் பறவையின் பெயர் கசாப்புக்காரன் என்று கூறினர். பள்ளி மாணவனாயிருந்தபோது இப் பெயரின் பொருள் புரியவில்லை. இந்தக் குருவி பெரும்பாலும் வெட்டுக்கிளி முதலிய பூச்சிகளையும் மற்றும் பல்லி, சிறிய ஓணான் முதலிய உயிரி களையும் பிடித்துத் தின்னும். இந்தக் குருவி அன்றாடம் தனது தேவைக்குமேல் பூச்சி முதலியவற்றைப் பிடித்துத் தின்றது போக மீதியானவற்றை மரஞ்செடிகளில் உள்ள முட்களில் செருகி வைத்துப் பின்னர் தின்பதுண்டு. இம்முறையான இதன் பழக்கத் தால் இக் குருவியைக் கசாப்புக்காரன் என்று அழைத்தனர். கசாப்புக் கடையில் ஆடுகளை வெட்டி இறைச்சியைத் தொங்க விடுவதுபோல் பூச்சி முதலியவைகளைப் பிடித்து மரஞ்செடிகள், முட் களில் செருகித் தொங்க வைப்பதால் கசாப்புக்காரன் குருவி (Butchers bird) என்று மிகமிகப் பொருத்தமாக அழைக்கப்படு கின்றது. இந்தக் குருவி உண்ணும் பழக்கத்தை அதன் பெயரி லேயே புரிந்துகொள்ள முடியும். இயற்கைச் செய்தியைக் கண்டு பொருத்தமாகப் பெயரிட்டழைத்த நாட்டார் வழக்கு மிகவும் போற்று தற்குரியதாகும். மற்றும் இப் பறவை மலையாள மொழியில் அசுரத் தான் என்றழைக்கப்படுவதையும் காணலாம். அசுரனைப்போலக்கொடு மையாக நடந்துகொண்டு பூச்சிகளைக் 'கபளீகரம்' செய்வதால் அசுரத் தான் என்று மலையாளத்தில் அழைக்கப்பட்டுள்ளது. இப் பறவையை நான் பள்ளி மாணவனாக இருந்தபோது கவனித்திருக்கிறேன். இப் பறவையை வேலமரம், கொடுக்காப்புளி மரம் இவைகளில்தான் அடிக்கடி கண்டிருக்கின்றேன். இந்த மரங்களுக்கு முட்கள் உண்டு. பூச்சி முதலியவைகளைப் பிடித்து முட்களில் செருகிச் சேமித்து வைக்கவே இந்த முள் மரங்களில் இப் பறவை வாழ்ந்ததாகத் தெரி கின்றது. இப் பறவைகள் பிடிக்கும் பூச்சி முதலியவைகளைத் தலையும் வயிற்றுடல் பகுதியும் சேரும் இப் பகுதியில் செருகி வைக்கின்றன. பிடிக்கும் பூச்சி முதலியவைகள் உடனே கெட்டு அழுகாமல் இருப் பதற்குத்தான் இவ்வாறு சேமிப்பதாகப் பறவை நூலறிஞர்கள் (Ornithologists) கருதுகின்றனர்.

"All shrikes are carnivorous and are bold and aggressive birds. They capture mostly insects but these are supplemented especially in the larger species by small reptiles,

mammals and birds. Many species impale the prey on thorns, twins, sticks or even barbed wire. It is a method of providing a stock pile of food against periods of shortage. Popular tradition has always inclined towards the latter theory, and the shrikes reserves of food are known as 'larders'. The theory is also supported by the fact that in many cases the prey is impaled with care often first by the point where the head joins the body so that it remains alive although paralysed thus avoding or atleast delaying the effects of decomposition. Further support is forthcoming when food is plentiful shrikes collect together all their prey without impaling them and eat only the innards.

இவ்வாறு கொடிய, கடிய முறையில் பூச்சி முதலியவற்றைக் கொன்று சேமித்து உண்ணும் பறவையைக் கோடிக்கரையில் கடியன் என்ற தூய தமிழ்ப் பெயரால் அழைத்தது மிகமிகப் பொருத்தமே.

மறைமலையடிகள் 108ஆவது பிறந்தநாள் விழாவும், "தமிழ்த்தாய் பிள்ளைத்தமிழ்" நூல் வெளியீட்டு விழாவும்

மறைத்திரு மறைமலையடிகளாரின் 108ஆவது பிறந்தநாள் விழாவும், கவிஞர் பேகன் அவர்கள் எழுதிய 'தமிழ்த்தாய் பிள்ளைத் தமிழ்' நூல் வெளியீட்டு விழாவும் 30-12-83இல், சென்னை இலிங்கிச் செட்டி தெரு, மறைமலையடிகள் நூல் நிலைய வள்ளலார் திருவருள் மண்டபத்தில் நடைபெற்றன. தமிழக அரசு கல்வித் துறைச் செயலர் திரு. டி. டி. சுந்தரராஜ் இ.ஆ.ப. அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றனர். கழக ஆட்சியர் உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். தமிழக அரசின் உள்துறைச் செயலர் திரு. தி. வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. அவர்கள் மறைமலையடிகளார் மாண்பு பற்றியும், கவிஞர் பேகன் அவர்களின் தமிழ்த்தாய் பிள்ளைத்தமிழின் சிறப்பு குறித்தும் உரையாற்றினர். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சஞ்சீவி, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. சிலம்பொலி செல்லப்பன் மற்றும் பல அறிஞர் பெருமக்கள் பாராட்டுரை வழங்கினர். கவிஞர் திரு. பேகன் (திரு. பாண்டியன், துணை ஆணையர், நுகர்பொருள் வழங்குதுறை) அவர்கள் நன்றியுரை நவில விழா இனிது நிறைவுற்றது.

பூம்புகார் கடலில் புதையுண்ட அழகம்மை

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் கடல்கொண்ட பூம்புகார் நகரம் கீழ்க்கடலில் ஆழ்ந்த உறக்கத்தில் கிடக்கிறது. அதன் நெட்டுறக்கத் துயில் நீக்கத் திருப்பள்ளியெழுச்சி பாடும் அடிக்கடல் ஆய்வாளர் களின் வருகையைத் தமிழகம் ஆவலோடு எதிர்நோக்கியுள்ளது.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் சற்றேறப்ப அறுபது ஆண்டுகளுக்கு முன் அடிக்கடலில் உறங்கும் பூம்புகார் நகரக் கோயிலுள் காலெடுத்து வைத்து அழகம்மை என்னும் அம்மன் படிமத்தை முச்சடக்கி மேலெடுத்து வந்து, கரை சேர்த்த பெருமை தஞ்சை மாவட்டம் கோனேயாம்பட்டினத்து சட்டையன் என்னும் மீனவப் பெருமகனுரைச் சாரும். அவ்வூரில் ஆசிரியப் பணியாற்றும் திரு. இராமையன் கூறும் வரலாற்றுச் செய்தி மெய்சிலிர்க்க வைக்கிறது. அவ் வரலாறு ஊர்மக்கள் அனைவர்க்கும் தெரிந்த செய்தி.

பூம்புகார் கடல் கொண்ட பகுதி, மீனவர்களால் கோயில்பாறை என்று அழைக்கப்படுகிறது. மீன் பிடிப்பதற்காகக் கடலில் எல்லை கோலிய பகுதிகள் 'செப்பாடு' எனப்படும். செயற்பாடு—செப்பாடு எனத் திரிந்திருக்கலாம். ஒருவர்க்குரிய செப்பாடு (செயற்பாடு) பகுதியில் மற்றவர் மீன் பிடிக்கமாட்டார். கோயில்பாறைப் பகுதியில், கடலடியிலுள்ள பாறைகளின் வடிவமைப்பு, கடலாழம் ஆகிய இரண்டின் துணை கொண்டே செப்பாடு பகுதிகளுக்குப் பெயரிடுவர். பாறை மிக்க பகுதிகளில் வலை வீசினுல் கல்லிடுக்குகளில் வலை சிக்கிக்கொள்ளும் என்பதற்காகத் தூண்டிலிட்டே அப் பகுதிகளில் மீன்பிடிப்பர். பூம்புகார் கடற்கரையிலிருந்து 400 அடி ஆழக்கடற் பகுதி வரை பாறையும் திட்டும் மேடுமாகக் கடலடிப் பகுதி காணப் படுவதாக மீனவர் கூறுகின்றனர்.

அறுபது ஆண்டுகளுக்கு முன், சட்டையன் என்னும் மீனவர் இட்ட தூண்டிலில் ஒரு பெரிய மீன் கிடைத்தது. அது தூண்டிற் கயிற்றைச் சுண்டி இழுத்த இழுப்பில் கயிறு முழுவதும் தளரவிட்டும் இறுதியில் கயிற்றை இழுக்க முடியவில்லை. எங்கோ பாறையில் சிக்கிக்கொண்டிருக்கும் என்று நினைத்து அடிக்கடல் நோக்கி மூழ்கி னுர். வியப்பினும் வியப்பு! ஒரு கோயில் தெரிந்தது. கோயில் கருவறை வாயிலில் நுழைந்தார். தூண்டிற் கயிற்ருேடு ஒரு முழம்

உயரமுள்ள பெண் தெய்வக் கற் படிமத்தைச் சுற்றிக்கொண்டது மீன். கயிற்றை மெதுவாகக் கழற்றியெடுக்க நேரமில்லை. படிமத்தைப் பெயர்த்து மீனையும் இழுத்துக்கொண்டு விரைந்து கரைசேர்ந்தார் அம் மீனவர்.

அழகும் அருளும் பொழியும் பெண்தெய்வத்திருமேனி அவரின் கண்களை வியப்பால் விரியச் செய்தது. தெய்வப் படிமத்தைப் பெயர்த்து வந்ததால் என்ன நேருமோ என அஞ்சி மணற்குவியலில் புதைத்துவிட்டு மீனுடன் வீடு திரும்பினர். சின்னுட்களுக்குப் பிறகு அத்தெய்வப் படிமை கிடைத்த செய்தி எப்படியோ பரவித் திருவெண்காட்டுக்கு அருகிலுள்ள அன்னப்பன்பேட்டையில் உள்ள சிவன் கோயிலில் அழகம்மை என்னும் அத் தெய்வப்படிமம் வைக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் அன்றுதொட்டு இன்றுவரை விழாக் கொண்டாடி வருகிறுர்கள், அப் படிமத்தை மீட்ட மீனவரின் குடும்பத்தார் ஆண்டுதவருது விழா எடுக்கின்றனர். ஆயின் அழகம்மை என்னும் தெய்வத்தின் திருப்பெயரை 'சுந்தராம்பாள்' என்று ஆரியப்படுத்திவிட்டனர். அதனுல் பூம்புகார் தெய்வம் கரையேறிக் கோயில் கொண்ட வரலாற்றை எவரும் அழித்துவிட முடியுமா ? ஆய்வாளர்களே ! உங்கள் கவனத்தை அழகம்மையின் பக்கம் திருப்புங்கள்.

கிறித்தவ இலக்கிய சங்க நூற்றுண்டு விழா

சி. எல். எஸ். எனச் சிறப்பாக அழைக்கப்படும் சென்னை, கிறித்தவ இலக்கிய சங்கம் தனது நூற்றுண்டு விழாவை அண்மையில் கொண்டாடியது. கொண்டாடியது நூற்றுண்டு விழாவாயினும், கடந்த 125 ஆண்டுகளாக இச் சங்கம் இலக்கியப்பணி புரிந்து வருகிறது. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய ஐந்து மொழிகளில் நூல்களை வெளியிட்டு வருகிறது. சென்னை-பெங்களூர், ஆகிய இரு நகரங்களில் சொந்தமாக அச்சகங்களையும், பெங்களூர் ஐதராபாத், கொச்சி, திருவல்லா, மதுரை, கோவை, கொடைக்கானல் ஆகிய எட்டு நகரங்களில் புத்தகக் கடைகளையும் கொண்டதாய் இயங்கிவருகிறது. 1858ஆம் ஆண்டு ஸ்காட்லாந்திலிருந்து வந்த டாக்டர் ஜான் மர்டாக் கிறித்தவ தாய் மொழிக் கல்விச் சங்கத்தை நிறுவினர். இதுவே சி. எல். எஸ்ஸின் துவக்ககாலப் பெயராகும். வின்ஸ்லோ, பெப்ரிஷியஸ், பெர்சிவல் ஆகியோரின் அகராதிகள் சி. எல். எஸ். தமிழுலகிற்கு அளித்துள்ள சிறந்த படைப்புகளாகும். இச் சங்கம் 'பூக்கூடை' என்னும் குடும்ப மாத இதழையும் வெளியிட்டுவருவதோடு, முதியோர் கல்விக்கெனப் பாட நூல்களையும் வெளியிட்டு வருகின்றது.

‘ஓடி வா’

[புலவர் திருமங்கலம் வை. தங்கமணி]

சைவமும் தமிழும் ஒன்றுய்ச்
சார்ந்தவோர் உருவ மாகி
தூவழி தனதாய்க் கொண்டு
தொண்டுகள் தமிழுக் காற்றிப்
பாவலர் போற்ற வாழ்ந்த
பொருளேசேர் வ.சு ஐயா!
காவியம் செய்து நும்மைத்
தேடுதும் ஓடி வாவே! (க)

பத்தெட்டுக் கணக்கு; நல்ல
பிரபந்தம்; காப்பி யங்கள்
அத்தனை நூற்க ளெல்லாம்
அச்சினில் ஏற்றி ஏற்றி
முத்தமிழ் அன்னை யாட்கு
முழுப்பணி செய்த கோவே
எத்திசைச் சென்றீர் ஐயா
தேடுதும் ஓடி வாவே! (உ)

கல்வியில் புலமை மிக்க
அறிஞரைத் தேடிக் கண்டு
நல்லன பலவும் கூறி
நாடிய செய்யச் சொல்லி
வல்லவ ராக்கி இந்த
வையகம் புகழச் செய்த
ஒல்கலே வ.சு. ஐயா
தேடுதும் ஓடி வாவே! (௩)

‘நல்லதோர் புத்த கத்தை
நாடுவோர் கழகம் செல்வர்’
‘நல்புகழ் கழகத் திற்கு
நாயகன் நீயே அன்ருே?’
எல்லேயில் பணிகள் ஆற்றி
எழில்புகழ் கொண்ட ஐயா
செல்வரே! சென்ற தெங்கே
தேடுதும் ஓடி வாவே! (௪)

———

• தாமரைச் செல்வர் வ. சு. அவர்களின் முதலாண்டு நினைவாக எழுதப்பெற்ற கவிதை.

பிறந்து வளரும் பெரிய பணி

[தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை
மாக்கவி பாரதி நகர், சென்னை-6000 39.]

வங்கிக் கலைச்சொல்லாக்கம்

அரசுத்துறைகள் அன்றாடம் பெருகிவருவதைப்போன்று, மொழித்துறைகளும் அன்றாடம் பெருகிவருகின்றன. புதிய துறைகள் எத்தனை என்பதைக்கூட எண்ணிப்பார்ப்பது இயலாத செயலாக இருக்கின்றது. அயல்மொழியாகிய ஆங்கிலம் எல்லாத் துறைகளிலும் ஏற்றம்பெற்று இலங்குவதை நாம் காண்கின்றோம். அதே போன்று அன்னை மொழியாகிய அருந்தமிழும் அனைத்துத் துறைகளிலும் ஆற்றல்பெற்று விளங்கவேண்டுமென்பது நம் அவாவாகும். துறைதோறும் துறைதோறும் தமிழன்னை நிறைவுபெற்றுத் திகழ வேண்டுமென்பது நமது பேரார்வமாகும்,

திருக்குறளில் இல்லாத கருத்துகள் எவையுமே இல்லையென்னும் அளவிற்குத் தித்திக்கும் செய்திகளைத் திக்கெட்டும் பரவச் செய்தார் திருவள்ளுவர். அதேபோன்று அன்றாடம் தேவைப்படும் பொதுமைக் கருத்துகள் பலவற்றைப் போற்றியுரைத்துள்ளார் மாக்கவி பாரதி. தமிழ் வளர்ச்சி குறித்துப் பாரதியார் தந்துள்ள இலக்கண விளக்கத்தை நாம் யாவரும் அறிந்துள்ளோம். அவர் கூறுகிறார் :

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதி லோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்''

பழம் பெருமைகளை நிரம்பப்பெற்றவர்கள் நாம். புதுப் பெருமைகளும் நமக்குக் குறைவின்றிப் பெருகவேண்டும் என்பது பாரதியாரின் வேணவாவாகும். ஆகவேதான் நல்லதொரு செயல் திட்டமாகப் ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' என்று அவர் நவில்கின்றார். இந்தத்

திட்டம் வெற்றிபெறக் கிளர்ச்சியூட்டும் பொன்னுரை ஒன்றையும் அவர் வழங்குகின்றார்.

> "சென்றிடு வீர்எட்டுத் திக்கும்—கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

ஈண்டுப் பாரதியார் குறிப்பிடும் கலைச்செல்வங்கள் யாவும் இந்நாளில் நம் அண்டையிலேயே வந்து குவிந்துகிடக்கின்றன. ஆயினும் அவை யாவும் இன்னமும் ஆங்கிலத்திலேயே இருந்துவருகின்றன வன்றோ? அந்தக் குறையைத்தான் இன்று நாம் போக்கியாக வேண்டும்.

தமிழன்னை விரைந்து முன்னேறிவரும் ஒருசில துறைகளை நாம் ஈண்டு நினைவுகூர்தல் வேண்டும். முதலாவதாக Administrative language என்று குறிப்பிடப்பெறும் ஆட்சிமொழித் துறையை எடுத்துக்கொள்வோம். இவ்வகையில் அரசு அமைத்துள்ள தமிழ் வளர்ச்சித் துறையும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்ற தனியார் நிறுவனங்களும் ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் போன்ற தமிழறிஞர்களும் ஆற்றிவரும் தொண்டுகள் அளவிடற் பாலனவல்ல. ஆட்சிச்சொல் அகராதியின் நான்காம் பதிப்பை அண்மையில் சிறந்த முறையில் வெளியிட்டுத் தமிழ் வளர்ச்சித் துறை தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது. அடுத்து Legal language என்று சொல்லப்படும் சட்டமொழியின் வளர்ச்சிக்காக அமைக்கப் பெற்றுள்ள ஆணையத்தைக் குறிப்பிடலாம். மறைந்த மாமேதைகள் நீதியரசர் மா. அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் இயங்கிய ஆணையமும் நீதியரசர் எஸ். மகராசன் அவர்கள் தலைமையில் அமைந்த ஆணையமும் அரிய சட்டச்சொல் அகராதிகளை வெளியிட்டு அருந்தொண்டாற்றியுள்ளன. மூன்றாவதாகத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தைக் குறிப்பிடவேண்டும். இது கல்லூரிப் படிப் பிற்குத் தேவையான நூல்களைக் கற்கண்டுத் தமிழில் வெளியிட்டு அன்னைக்குச் சிறப்பான அணிகளைச் சூட்டிவருகின்றது. இந்த நிறுவனமும் ஒருசில அகராதிகளை வெளியிட்டு உதவியுள்ளது. இவ்வாறு ஆட்சித்துறைத் தமிழிற்கும் சட்டத்துறைத் தமிழிற்கும் அறிவியல்துறைத் தமிழிற்கும் பற்பல நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன.

இப்போது வங்கித் தமிழை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ள பாரத ஸ்டேட் வங்கியின் தங்கப் பணிகளைச் சிறிது ஆராய்வோம். வங்கி களுக்கெல்லாம் மாதிரி வங்கியாய்த் திகழும் பாரத ஸ்டேட் வங்கியின் பணிகள் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன. எப்பக்கம் திரும்பினாலும் எழிலார்ந்த தமிழ்ச்சொற்கள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. பெயர்ப்பலகைகள் யாவும், அலுவலகத்தின்

உள்ளும் புறமும், அழகிய தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்று அலுவலகத்தை அணிசெய்கின்றன. Teller என்பவர் யார் என்று தெரியாமல், பலர் அப் பெயரைச் ''சொல்பவர்'' என்றும் ''மொழிபவர்'' என்றும் கூறக்கேட்டுள்ளேன் நான்! பாரத ஸ்டேட் வங்கியினுள் நுழைந்து பார்த்தவுடன்தான், அவர் வேறு யாருமில்லை, அவர்தான் ''விரைவுக் காசாளர்'' என்பதை நான் அறிந்து கொண்டேன். இவருக்குப் ''பெட்டகர்'' என்னும் புதிய பெயரும் இப்போது அமைக்கப்பட்டுள்ளது. ''காசாளர்'' என்னும் பெயரைக் கூடப் பயன்படுத்தாமல் பல வங்கிகள் மாசுபடிந்த நிலையில் இயங்கி வருகின்றன. ''காசு'' என்னும் தமிழ்ச்சொல் ஆங்கிலத்தில் Cash என்றாகி அதன்பின்னர் Cashier என்னும் பெயர் ஏற்பட்டது. இந் நிலையில் தமிழ்க் காசுவைப் பயன்படுத்திக்கொள்வதில் தயககம் காட்டத் தேவையில்லையே! ''விரைவுக் காசாளர்'' என்னும் பெயர், அந்தக் காசாளர் ஆற்றும் பணியைக் கருத்தில்கொண்டு அமைக்கப்பட்ட நல்ல பெயராகும். ஆயினும் தமிழ்த் திட்டத்தைப் பாரத ஸ்டேட் வங்கி விரைந்து செயலாற்றுவதையும் இந்தப் பெயர் பாங்குற எடுத்துக்காட்டுகின்றது என்று எண்ணி மகிழ்ந்தேன். பணம் புழங்கும் இடங்களில் தமிழ் புழங்க வாய்ப்பில்லை என்று சிலர் தவறான கருத்தை எடுத்துக் கூறிவந்தனர். இதனை அடியோடு மறுக்கும் வகையில் அன்னையை அரியணையில் ஏற்றி அகம் மகிழ்கின்றது இந்த வங்கி.

பாரத ஸ்டேட் வங்கி ஏற்கெனவே ''வங்கிக் கலைச் சொற்கள்'' என்னும் சிறிய நூலை வெளியிட்டுள்ளது. இதில், பெரும்பாலும் வங்கியின் பல்வேறு துறைகளின் பெயர்களும் வங்கி அதிகாரிகளின் பதவிப் பெயர்களுமே காணப்பெறுகின்றன. இந்த வங்கியின் சார்பில் திரு. இரா. நமச்சிவாயம் என்னும் அதிகாரி மதுரையில் 1981 சனவரியில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று படித்துச் சிறப்பித்தார்.

அன்று சிறிய செடியாக இருந்த வங்கித் தமிழ், இன்று அடையாறு ஆலமரம் போன்று மாபெரும் மரமாக வளர்ந்து, விழுதுகள் விட்டுக் கண்கொள்ளாக் காட்சியாக மாறியுள்ளது. ஆம், பாரத ஸ்டேட் வங்கி, வங்கிக் கலைச்சொற்கள் கொண்ட பெரிய அகராதியை, பேரகராதியை, இப்போது தொகுத்துள்ளது. இனிக்கும் மொழிபெயர்ப்புகளைக் கொண்டு இலங்குகினறது இநத அகராதி. நுட்பங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது இந்த அகராதி. வெறும் மொழிபெயர்ப்பாக மட்டும் அமையாமல், மொழியாக்கம் என்னும் சிறப்புநிலை பெற்று நடைபோடுகின்றது இந்த அகராதி. தெற்றெனப் பொருள்

விளங்கும் வகையில் முற்றிய சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்த அரிய அகராதியை அருந்திறலுடன் தொகுத்துள்ள பெருமை கவிஞர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களையே சாரும்.

பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரியாகப் பணியாற்றிவரும் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் நாடறிந்த நல்ல எழுத்தாளராவார். பல இனிய நூல்களின் ஆசிரியர், சிறந்த கவிஞர். இவருடைய செந்தமிழ்ப் பாடல்களும் சுவைமிக்க நாடகங்களும் அனைத்திந்திய வானொலியிலும் சென்னைத் தொலைக்காட்சியிலும் பெருமுழக்கம் செய்துவருகின்றன, கசப்பான உண்மைகளையெல்லாம் தெளிதேனில் குழைத்து ஊட்டி மக்களைத் திருத்தும் மாண்புமிக்கவர் இவர். இவருடைய தளராத தமிழார்வத்தாலும் அயராத உழைப்பினாலும் ஆகிவந்துள்ளது இந்தப் பேரகராதி.

இந்த அரிய பணிகளுக்கெல்லாம் மூலமுதல்வராக விளங்கும் பெருமகனார் தலைமைப் பொது மேலாளர் உயர்திரு. கபில் தேவ் நய்யார் அவர்களாவார்கள். வீரப்பரம்பரையில் வந்துள்ள இவர் இன்று தமிழ் வீரம் காப்பதிலே தளராது செயற்பட்டுவருகின்றார். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இவர் எஞ்சாப் புகழை ஈட்டிவருகிறார். தமிழ்மொழியின் தனிச்சிறப்பை உணர்ந்து, தாமே அதனைக் கற்றுக்கொள்வதற்கும் கலைச்சொல் அகராதியைத் தொகுக்கும் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்கும் மனமுவந்து முன் வந்துள்ளார். ''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்'' பெற்று வானுயர் வடிவாய்த் திகழும் இவரை எவ்வளவு போற்றினாலும், அது தமிழன்னையைப் போற்றியதாகவே அமையும்.

அரிதின் முயன்று ஆக்கப்பெற்றுள்ள பெரிய அகராதியைச் சரிபார்க்கும் பொறுப்பு பதினான்கு பேர்கள் கொண்ட தமிழறிஞர் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பெற்றுள்ளது. இந்தக் குழுவில் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார், டாக்டர் ஔவை து. நடராசனார், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், திரு. கோ. முத்துப்பிள்ளை, பேராசிரியர் இரா. மதிவாணன், டாக்டர் பொற்கோ, டாக்டர் க. ப. அறவாணன், திரு. ஏ. ஏ. ஹக்கீம், பேராசிரியர் ம. இலெ. தங்கப்பா, திரு. சோ. சேஷாசலம், டாக்டர் கவிஞர் த. கோவேந்தன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, கழக ஆட்சியாளர் இரா. முத்துக்குமாரசாமி, டாக்டர் விக்கிரமன் ஆகிய அறிஞர் பெருமக்கள் இடம் பெற்றுள்ளனர். உருவாக்கப்பெற்றுள்ள அகராதியில் அமைந்துள்ள சொற்கள் பதினான்காயிரம் ஆகும். ஓரறிஞர் ஓராயிரம் சொற்களை ஆய்வுசெய்வது எளிதாக இருக்கும் என்னும் கருத்தில் பதினான்கு அறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளனர் என்பதை எளிதில் ஊகித்தறியலாம். பதினான்கு என்னும் எண்ணிக்கையில்

ஏதேனும் ஒரு சிறப்பு இருக்கத்தான் செய்யும் என்று என் மனம் எண்ணியது.

"ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப்
புண்ணியப் புனல்கள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென்
றேவினன் அரசன் என்றாள்"

என்னும் கம்பராமாயணப் பாடல் நினைவிற்கு வந்தது. பதினான்கு ஆண்டுகள் தவம் செய்வதற்காக இராமன் காட்டிற்குச் சென்றான். அதைப் போன்று இந்தப் பதினான்கு அறிஞர்களும் தவம்செய்து நல்ல பல மொழியாக்கங்களைச் செய்துதர வேண்டுமென்பது வங்கியாரின் எண்ணமாக இருக்கலாமோ என்று நினைந்தேன். பொறுப்பின் ஆழம் அப்போதுதான் புலப்பட்டது.

கலைச் சொல்லாக்கக் குழுவின் முதற்கூட்டம் இனியதொரு விழாவாக 13-11-83 அன்று சென்னையில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு உயர் நீதிமன்ற நீதிபதி மேதகு நீதியரசர் எஸ். மோகன் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள். வங்கியின் உயர் அதிகாரிகள் உயர்திரு. கபில் தேவ் நய்யார், எஸ். சீனிவாசன், வி. எம். டி. ஜோஷி, ஜி. சத்தியமூர்த்தி, ஈ. ஜே. சௌந்தரராஜன், ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோர் இந்த விழாவின் ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்ததோடல்லாமல், இனிய சொல் விருந்துகளையும் படைத்துத் தந்தார்கள். மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர் வலம்புரி ஜான் அவர்களும், சிலம்பொலி சு. செல்லப்பனார், டாக்டர் ஔவை து. நடராசனார், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் போன்ற அறிஞர் பெருமக்களும் சொற்பெருக்காற்றி வங்கியின் தமிழ்ப் பணியினைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தனர்.

உருவாக்கியுள்ள வங்கிக் கலைச்சொல் அகராதியின் அருமை பெருமைகளை வாசகர்களாகிய தாங்களே நேரில் படித்துப் பார்த்து மகிழ்ச்சியுறுவதுதான் அதனை ஆக்கியோர்க்கு ஊக்கமூட்டும் அரிய செயலாக அமையும். எனினும் ஒருசில சிறப்புக் கூறுகளை மட்டும் நான் ஈண்டு எடுத்துக்காட்ட விழைகின்றேன்.

இந்த அகராதி அரியதொரு கலைச்சொற் பெட்டகமாகும் என்று கூறுவது எள்ளளவும் மிகையாகாது. மிகப் பெரும்பான்மை யாக இடம் பெற்றுள்ள சொற்கள் வங்கித் துறைக் கலைச் சொற்களே

யாகும் என்று கூறத் தேவையில்லை. ஆயினும் தேவையான அளவிற்குப் பிற துறைச் சொற்களும் இதில் பயின்று வருகின்றன. ஆட்சியும் சட்டமும் எத்துறைக்கும் தேவைப்படும் இரண்டு கண்களாகும். இவை குறித்த கலைச் சொற்களும் இவ்வகராதியில் பொருத்தமான அளவிற்குச் செறிந்து நிற்கின்றன. பெரும்பான்மையாக இடம் பெற்றுள்ள சொற்கள் என்னும் அடிப்படையில் கண்ணுறும்போது, வங்கிக் கலைச்சொற்கள், சட்டக் கலைச்சொற்கள், ஆட்சிச் சொற்கள் ஆகிய மூன்றும் இந்த அகராதியை அணி செய்கின்றன. இயல், இசை, நாடகம் என்று மூன்று தமிழாக வகுத்துத் தந்தனர் நம் முன்னோர். இப்போது இந்த அரிய கலையகராதி வங்கித் தமிழ், சட்டத் தமிழ், ஆட்சித் தமிழ் என்னும் புதிய முத்தமிழ்க் களஞ்சியமாக முகிழ்த்துள்ளதை எண்ணி யாவரும் பெருமிதம் கொள்ளலாம்.

''ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று'' என்று பாடுகிறார் பட்டினத்தார். அந்த அளவிற்கு நாங்கள் சென்றுவிடவில்லை. இரண்டே மாதங்கள் இடையருப் பணி புரிந்துள்ளோம். வங்கியின் சார்பில் பொறுப்பேற்றுள்ள உயர்திரு. ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் ஓய்வு சிறிதுமின்றி இருபத்து நான்கு மணி நேரமும் ஆய்வு செய்துள்ளார் என்று கூறின், அது சிறிதும் மிகையாகாது. தொடக்க விழாவைத் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நாங்கள் ஒன்ருகக் கூடிப் பொதுவான கலைச் சொற்கள் பலவற்றைக் கூர்மையாக ஆராய்ந்துள்ளோம். இந்தக் கூட்டங்களில் வங்கியின் உயர் அதிகாரிகள் உயர்திரு. ஜி. சத்திய மூர்த்தி அவர்களும் ஈ. ஜே. சௌந்தரராஜன் அவர்களும் எங்களுக்குப் பெரும் வழிகாட்டிகளாக அமைந்து உதவியுள்ளனர். வங்கிச் சொற்களின் நுணுக்கங்களையெல்லாம் வாரிவாரி வழங்கி அலசிக் காட்டிய பெருமை இவ்விரு அறிஞர்களையுமே சாரும். எத்துறைச் சொற்களாயினும் அவற்றை மெத்தவும் எளிதாக்கி இனிது விளக்கிக் காட்டினர் உயர்திரு. ஜி. சத்தியமூர்த்தி அவர்கள். உயரிய மொழி பெயர்ப்பு உருண்டோடி வரும் வரையில், விளக்கத்தை இடை நிறுத்தாது, தொடர்ந்து செல்லும் உயர்திரு. ஜி. சத்தியமூர்த்தி அவர்களின் நுண்ணறிவு பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். வங்கித் துறைச் சொல்லாயினும் சட்டத்துறைச் சொல்லாயினும் ஆட்சித் துறைச் சொல்லாயினும் அனைத்துத் துறைகளிலும் பயிலறிவு மிக்கவர் உயர்திரு. ஜி. சத்தியமூர்த்தி அவர்களாவார்கள்.

பாரத ஸ்டேட் வங்கி அமைத்துள்ள மொழித் துறையின் முதல்வராவர் உயர்திரு. ஈ. ஜே. சௌந்தரராஜன் அவர்கள். உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து உயர்ந்தோங்கி நிற்கும் இவர் எண்ணிய எண்ணியாங்கு எய்தும் இயல்பினர். ஆயினும்

தம்மொத்த பிற அறிஞர்களைப் பேணுவதில் கரும்பு மனிதராவார். இந்த நல்லறிஞர் பல பொன் போன்ற மொழி பெயர்ப்புகளை எடுத்து வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

தொடக்க முதல் கடைசி வரை, தொட்டதெல்லாம் பொன்னாக, அள்ள அள்ளக் குறையாமல், எழிலார்ந்த சொற்களை ஏராளமாக வழங்கி வருபவர் ஏர்வாடி எஸ், இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆவார்கள்.

குழு அறிஞர்கள் தந்துள்ள அரிய மணிகளின் சிறு சிறு தொகுப்புகளை விரைவில் தங்கள் பார்வைக்கு வைக்க இருக்கின்றேன் என்பதை இந்தக் கட்டத்திலேயே சொல்லிவிட விரும்புகின்றேன். நிலவரை, கலந்தொடு துறை, அமைவுறு வாடிக்கையாளர், சமை திட்டம், ஐந்தொகை அறிக்கை ஆகிய அழகு தமிழ்ச் சொற்களுக்கு உரிய ஆங்கிலம் என்ன என்று சிறிதுநேரம் சிந்தித்துக் கொண்டிருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அலுவல்முறை சாராத அறிஞர் வரிசையிலே, முதலிடம் வகிப்பவர் டாக்டர் கவிஞர் த. கோவேந்தன் அவர்களாவார்கள். இவர் ஓர் அதிசய மனிதர். தமிழ்ப் புலமையும், தன்னடக்கமும், நிறைபுலமும், சலியா உழைப்பும், சிறிதும் நெறிதிறம்பாச் செந்தமிழ்ப் பற்றும் ஒன்றாக உருவெடுத்தவர் இவர். இவருடைய சேவை வங்கிக்குக் கிடைத்துள்ளமை பெரும் பேருகும்.

ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களுக்கும் பிற கூட்டங்களுக்கும் தவறாது வருகை தந்து சிறப்பித்த செந்தமிழ் அறிஞர்களைப் பெரிதும் பாராட்டுதல் வேண்டும். இவ் வகையில் உழைத்துள்ள டாக்டர் கவிஞர் த. கோவேந்தன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, டாக்டர் க. ப. அறவாணன், சோ. சேஷாசலம், இரா. முத்துக்குமாரசாமி ஆகியோரை எவ்வளவு போற்றினாலும் தகும். இந்த அறிஞர்களை எண்ணும்போதெல்லாம் உள்ளம் பூரிக்கும், உடல் புல்லரிக்கும். தெள்ளுதமிழ்ச் சொற்களை மின்னொளிபோன்று அள்ளி வழங்கியுள்ளனர் இவர்கள். இந்தியன் வங்கியில் உயர்பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ள குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் வங்கிக் கலைச்சொற்களுக்குப் பயனுள்ள அரிய விளக்கங்களைத் தந்து உதவியுள்ளார். தமிழில் அரிய சட்ட நூல்களை இயற்றியுள்ள சோ. சேஷாசலம் அவர்கள் சட்டக் கருத்துகள் பலவற்றைப் பட்டறிவுகொண்டு துலக்கியுள்ளார். தொன்னெறி போற்றி நன்னெறி காட்டி நல்ல தமிழாக்கங்களைத் தந்துதவியுள்ளார் டாக்டர் க. ப. அறவாணன். முழு ஈடுபாட்டோடு குழுவில் சிறந்து விளங்கும் இன்னொரு பேரறிஞர் இரா. முத்துக்குமாரசாமி அவர்களாவார்கள்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் இன்றைய ஆட்சியாளராக இலங்கும் இவர் பழைய ஆட்சியாளர் வ. சுப்பையா அவர்களின் பண்பு வழியில் நடை போடுகின்றார். தண்டமிழ்ப் புலமையும், நிறுவன நெறிகளும், சென்னைத் தமிழின் செவ்விய நடைகளும், ஆட்சிமொழியின் மாட்சிமைகளும் நிரம்பி நிற்பவர் இரா. முத்துக் குமாரசாமி அவர்களாவார்கள். இவர் தந்துள்ள ஊக்க மொழி பெயர்ப்புகள் உள்ளம் கவர்வனவாகும்.

கூட்டுத் தவத்தின் பெருமையை ஏட்டில் எழுத இயலாது என்றே கருதுகின்றேன். பல நாட்களாகத் தலைமறைவாகியிருந்த தண்டமிழ்ச் சொற்களெல்லாம் முனைந்து முனைந்து முன்வந்து காட்சி தந்தன. அவற்றை ''எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே'' என்று வாழ்த்தி வரவேற்று ஏற்ற இடங்களிலெல்லாம் அமைத்துக்கொண்டோம்.

Bill of lading என்னும் தொடர் என்றுமே இடர்தந்து வந்த ஓர் அரிய தொடராகும். ஆனால் அது சுவைத்து மகிழும் செந் தமிழ்த் தொடராக மாறிவிட்டது. கருத்து விளங்கவேண்டும், அதன்பின்னர் கனிந்த தமிழ்ச்சொல் ஓடிவர வேண்டும். நம்முடைய ஐயங்களையெல்லாம் கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டால் கற்கண்டு சொற்கொண்டு எளிதில் அமைத்துவிடலாம். ஆம் ''கலச் சரக் கேற்றுச் சீட்டு'' என்னும் இனிய மொழிபெயர்ப்பைப் புதிய அகராதி யில் சுவைத்து இன்புறலாம்.

கப்பலைப்பற்றிப் பேசியவுடன் இன்னொரு தொடர் நினைவிற்கு வருகின்றது. Port of Call என்னும் தொடர் ஆங்கிலத்தில் மிக அழகிய தொடராகும். சரக்குகளை ஏற்றவும் இறக்கவும், பயணிகளை ஏற்றிக்கொள்ளவும் இறக்கிவிடவும், வழியில் கப்பலுக்கு ஏற்பட்ட கெடுதல்களைப் பழுதுபார்க்கவும், குறிப்பிட்ட துறைமுகங்களை எட்டிப் பார்க்கின்றது அந்தக் கப்பல். இத்தனை கருத்துகளையும் Port of Call என்னும் மூன்றே சொற்களில் அடக்கிக்கொண்டு அழகு நடை பயில்கின்றது ஆங்கிலம். அந்த முறையில் நம் அன்னை மொழியி லும் அமைக்க இயலுமா என்னும் ஏக்கமும் கவலையும் பெருகி விட்டன. ''இயலும், இதோ இருக்கிறது தமிழில்'' என்று குழு உறுப்பினர் கொடுத்து உதவினர். Port of Call ஆம், அதுதான் ''கலம் தொடு துறை.'' இவற்றுள் எந்தத் தொடர் அழகில் மிக்கது என்று அறிந்துகொள்ள இயலாவண்ணம் அழகுப் போட்டியன்றோ நடந்தவண்ணம் இருக்கின்றது.

Industrial Complex, Hotel Complex என்றெல்லாம் பேசி வருகின்றோம். Complex என்னும் சொல், பொருளிலும் இயல்பி

லும் சிக்கலாக இருந்து வருகின்றது. தொழில் தொகுப்பு, உண வகத் தொகுப்பு என்று சொன்னால் பொருள் விளங்குகின்றது. ஆயினும் ஏர்பெற்று இலங்கவில்லை. நீண்ட காலமாகவே இந்தச் சொல் ஒரு வழுக்கல் நிலமாகவே இருந்துவந்துள்ளது. இந்தக் Complex என்னும் (Complicated) சிக்கலான சொல்லைப் பார்த்து, குழு உறுப்பினர் ஒருவர் புன்முறுவல் பூத்தார். வைரமணி ஒன்றை வழங்கி மகிழ்ந்தார். ஆம். Complex என்றால் ''இணைவம்''. ''இணையம்'' நமக்குத் தெரியும், அது Federation ஆகும். இந்த யகரத்தை வகரமாக்கிக் கட்டித் தங்கம் ஒன்றை வெட்டிக்கொடுத்து விட்டார் நண்பர்.

Underwriter என்னும் சொல் எல்லா எழுத்தாளர்களையும் (writerகளையும்) ஏமாற்றி வந்தது! வங்கி அதிகாரிகள் இந்தச் சொல்லிற்கு ஆங்கிலத்திலுள்ள செவ்விய பொருள்களையெல்லாம் சிறப்புற நவின்றனர். அதன் பின்னர் Underwriter ''எஞ்சு பங்கு ஏற்பாளர்'' என்னும் இனிய பெயரை ஏற்றுக்கொண்டார்.

''கணக்குப் பார்த்தால் பிணக்கு வரும்'' என்று சொல்வார்கள். ஆயினும் பிணக்கு வராமல் காத்துக் கணக்குப் பார்க்கும் இடம்தான் வங்கி என்னும் நிறுவனமாகும். வங்கித் தொடர்கள் வண்டித் தொடர்கள்போலக் கண்சிமிட்டி நம்மைக் கலங்க வைக்கும் ஆற்றல் பெற்றனவாகும். Pro rata rate என்னும் தொடரை எண்ணிப் பாருங்கள். ஓட்டம் பிடித்துவிடலாம் என்னும் எண்ணந்தான் உடனே தோன்றும். ஆயினும் அச்சம் சிறிதும் கொள்ளாமல் ''விகித அடிப்படை வீதம்'' என்னும் மொழிபெயர்ப்பைக் குழு நல்கி விட்டு. அந்த வண்டியில் ஏறிக்கொண்டு பயணம் செய்யப் புறப்பட்டு விட்டது. 'இல்லை'' என்னும் சொல்லுக்குத் தமிழில் இடம் இல்லை.

Photostat copy என்னும் தொடர் எங்காவது வந்துவிட்டால் என்ன செய்வது, அதற்குரிய மொழிபெயர்ப்பு தெரியவில்லையே என்று நான் அஞ்சிக்கொண்டிருந்தேன். யாரும் இதைப்பற்றிப் பேசாமலிருந்தால், அதுவே அவர்கள் எனக்குச் செய்யும் பேருதவி யாகவிருக்கும் என்று எண்ணிக்கொண்டேன். திடீரென்று அந்தத் தொடர் மேடையில் ஏறி, உலாவரத் தொடங்கிவிட்டது. அச்சத் திற்கு அளவே இல்லை. முகமெல்லாம் வெளுத்துவிட்டது. இந்தக் காட்சியை ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் எப்படியோ கண்டு கொண்டார். அவர் ஓர் ஒளி பொருந்திய பெயர்ப்பைக் கூறிப் புன்னகை புரிந்தார். ஆம். Photostat copy ஒளி நகல். ஆதி மூலமே என்று ஓலமிட்ட கரிக்கு உதவிய உயர்நிலையை எய்தி விட்டார் ஏர்வாடி அவர்கள்.

Perfect market என்னும் பெயரைப் பார்ப்போம். Perfect என்னும் சொல் மிகமிகத் தொல்லைதரும் ஒரு சொல்லாகும். ஏனென்றால் யாருமே perfect ஆக இருப்பதில்லை ! எவ்வளவுதான் அன்பாகவும் அக்கறையாகவும் நாம் மொழிபெயர்ப்புகளை அமைத்தாலுங்கூட, இது சரியாக அல்லது சிறப்பாக அமையவில்லையே என்று பலர் தாங்களும் அல்லற்பட்டு நமக்கும் தொல்லை கொடுப்பார்கள் ! மூர் அங்காடி தெரிகிறது. சிந்தாமணிச் சிறப்பங்காடி தெரிகிறது. ஆயினும் Perfect market தெரியவில்லையே என்று இடர்ப்பட்டோம். வங்கி அதிகாரிகளின் அழகிய விளக்கங்களினிடையே சிந்தனைக் கடலில் மூழ்கினோம். ''நிறைசீர் அங்காடி'' என்னும் நன்முத்தை ஏந்தி வந்தோம்.

Office-bearer ஐ எல்லாருக்கும் தெரியும்! நான், நீ என்று போட்டியிடுவார்கள்! அதைச் சிறிது தமிழில் சொல்லுங்கள் என்று கேட்டுவிட்டால், திகைப்பார்கள். பாரத ஸ்டேட் வங்கியோ இதை எந்தவித முயற்சியும் இல்லாமல் ''பதவிப் பொறுப்பாளர்'' என்று அமைத்துள்ளது. Office-bearers—இவர்கள் பதவியைப்பற்றி நினைப்பதைவிட பணியைப்பற்றி நினைப்பது பயனுடையதாகுமன்றோ? ஆகவே இவர்களை ''அலுவல் பொறுப்பாளர்கள்'' என்று அமைத்துவிடலாமா என்று ஆய்ந்துவருகின்றோம்.

ஒரு முக்கிய கருத்தை இந்தக் கட்டத்தில் கூறவிரும்புகின்றேன். முழுமணி போன்ற கருத்தாகும் அது. வங்கித் துறைக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த சொற்கள் நிறைய இருக்கின்றன. நீண்ட நெடிய வழக்கினால் நுண்ணிய பொருளை அவை ஏற்றுத் திண்ணிய நிலையைப் பெற்றுவிடுகின்றன. வங்கிக் கலைச்சொற்களுக்கென்றே விளக்க உரைகள் பகர்கின்ற ஆங்கில நூல்கள் கண்ணைப்பறிக்கும் அழகுடன் நிறைய இருக்கின்றன. சிந்திக்கவைக்கும் சிறப்புப் பொருள்களை அவற்றில் கண்டு களிக்கலாம். அவற்றைப் புரட்டுந்தோறும் இத்தகைய அழகிய நூல்கள் நம் அன்னை மொழியில் எப்போது வருமோ என்னும் ஏக்கத்தையே எனக்கு உண்டாக்கும்.

ஆட்சிமொழி, சட்டமொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் பழக்கமுள்ள எனக்கு இவற்றினிடையே தோன்றும் நுட்ப வேறுபாடுகள் பெருமகிழ்ச்சியை அளிக்கும். ஓர் ஆங்கிலச்சொல் ஆட்சிமொழியில் ஒரு பொருளைத் தந்து, அதே ஆங்கிலச் சொல் சட்டமொழியில் வேறுபொருளைத் தந்துநிற்கும். இதேபோன்று வங்கிமொழியிலும் பல சொற்கள் அமைந்திருப்பதைக் கண்டு களித்தேன். Tag என்னும் சொல் ஆட்சிமொழியில் ''இணைப்பு நூல்'' என்னும் பொருளைத் தருகின்றது. ஆயினும் இதே சொல் வங்கிமொழியில் ''குறிப்பீட்டுச்சீட்டு'' அல்லது ''அடையாளச்

சீட்டு'' என்னும் பொருளைக் கொடுக்கின்றது. Lien என்பது முக்கியமான இன்னொரு சொல். இதற்கு ஆட்சிமொழியில் ''மீள் உரிமை'' என்று சொல்வார்கள். அதாவது ''பழைய பதவிக்கு மீண்டும் திரும்பிவருவதற்கான உரிமை.'' இதே சொல்லுக்கு வங்கி மொழியில் வேறொரு பொருள் கிடைக்கின்றது. அதாவது ''ஒருவர் பெற்றுக்கொண்ட தொகையை அவரிடமிருந்து மீண்டும் தண்டல் செய்யும் உரிமை'' என்பதாகும். ஆகவே வங்கிமொழியில் இது ''பற்றுரிமை'' என்று வடிவுபெறும். இந்த இரண்டு எடுத்துக் காட்டுகளே போதுமானவை என்று கருதுகின்றேன். ஆழம் தெரியாமல் காலைவிட்டால் அகப்பட்டுக்கொள்வோம் என்று மட்டும் சொன்னால் போதாது, அடித்துச் செல்லப்படுவோம் என்று தான் சொல்லவேண்டும்.

ஏதேனும் ஓர் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் அமையவில்லை என்று வைத்துக்கொள்வோம். அந் நிலையில் ''இதற்குப் பொருத்தமான சொல் திருக்குறளில் கட்டாயம் இருக்கும்'' என்று சொல்லிக் குழு உறுப்பினர்கள் முழக்கம் செய்வார்கள். திருக்குறள் ஒரு வற்றாத ஊற்று. திருவள்ளுவர் எல்லா மக்களுக்கும்—ஏன்—எல்லாத் துறைகளுக்கும் உதவும் அமுதசுரபி.

> ''நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
> முந்து கிளவாச் செறிவு.''

இந்தக் குறளில்வரும் ''செறிவு'' என்னும் சொல்லிற்கு நாளெல்லாம் பொருள் சொல்லலாம். அஃது ஓர் இலக்கிய ஆராய்ச்சியாக முடிந்துவிடும். அது ஈண்டு நமக்குத் தேவையில்லை. ''பெரிய வர்கள் இருக்கின்ற அவையிலே அவர்கள் பேசுவதற்கு முன்பு, சிறியவர்கள் பேசமுனைதல் ஆகாது. பெரியவர்கள் தங்கள் கருத்து களைத் தெரிவித்த பின்னரே, சிறியவர்கள் பேசத் தொடங்குதல் வேண்டும்.'' இந்தக் குறளில் வருகின்ற ''முதுவர்'' என்னும் சொல்லை உற்றுநோக்கினால், அது இக் காலத்தில் பெருவழக் காகவுள்ள Senior என்னும் சொல்லுக்கு ஏற்ற சொல்லாக இருப்ப தைக் கண்டு களிகூரலாம். Senior கள் இருக்கும் அவையிலே Junior கள் முந்திக்கொண்டு பேசுதல் ஆகாது.

இப்போது வெளிவரவிருக்கும் வங்கிக் கலைச்சொல்லகராதி, அகராதிக்கலையின் வரலாற்றிலே ஒரு land mark ஆக விளங்கும் என்று உரைத்தால் அது முற்றிலும் உண்மையாகும். Land mark என்னும் இந்தச் சிறிய தொடருக்குத் தமிழ் என்ன? Mile stone என்று வந்தால் ''மைல் கல்'' என்று எளிதில் கூறிவிடுவோம். ஓர் அகராதியில் பார்த்தேன். Land mark என்றால் ''நிலக்

குறியீடு'' என்று கண்டிருந்தது. ஓரளவு நன்றாக இருந்தாலும், உயர் அளவை இது எட்டிப் பிடிக்கவில்லையே என்று எண்ணினேன். குழு உறுப்பினர் ஒருவர், குறுகத் தறித்த குறளிலேயிருந்து ஒரு பாவினை மிடுக்காகப் பாடிக் காட்டினார்.

''நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றுது புத்தேள் உலகு''

''நிலவரை'', ''நீள்புகழ்'', ''புலவர்'' என்னும் சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிப்பார்த்தால், புதுப்புதுப் பொருள்கள் அரும்புவதைக் காணலாம். நீள்புகழுக்குரிய பெரும்புலவர் வள்ளுவர் ''நிலவரை'' என்னும் சொல்லை நமக்கு அருளியுள்ளார். அதுதான் Land mark ஆகும்.

Absentee landlord என்னும் தொடர் இன்று அடிக்கடி பேசப்படும் தொடராகும். ''நிலத்தை நேரில் சென்று பார்க்காத நிலக்கிழார்'' என்பதுதான் சரியான கருத்து. இதனைச் சுருக்கி உரைத்தால், மொழிபெயர்ப்பில் நாம் முன்னேற்றம் காணமுடியும். இதற்கும் வள்ளுவரே வகைசெய்கின்றார்.

''செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்''

இல்லாளைச் சென்று பார்க்காத கணவனும் நிலத்தைச் சென்று பார்க்காத நிலக்கிழாரும் ஒரே நிலையில் உள்ளனர் என்று படம் பிடிக்கிறார் வள்ளுவர். செல்லா நிலக்கிழார் காலப்போக்கில் செல்லுபடியாகாத நிலக்கிழாராக மாறிவிடக்கூடும்! செல்லா நிலக்கிழார் = Absentee landlord.

பதினான்காயிரம் சொற்கள் என்று தொடக்கத்தில் குறிப்பிட்டேன். அது இப்போது பதினைந்தாயிரம் என்று வளர்ந்துள்ளது. இது மேலும் பெருகும், செம்மை பெறும் பிறந்து வளரும் பெரிய பணியாகும் இந்தக் கலைச்சொற் களஞ்சியம்,

இனிய, எளிய, தூய தமிழ்ச் சொற்களுக்கு நாங்கள் முதலிடம் தந்துள்ளோம். இலக்கண வரம்புகள் உடைய உயர் மொழி தமிழ் மொழியாகும். இனிமைக்கே எடுத்துக்காட்டாய் இலங்குவது அதுவேயாகும். அந்த இனிமையைக் காப்பதில் நாங்கள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டுள்ளோம். பிற மொழிச் சொற்கள் மிகுதியாகக் கலவாமல், உரமான தமிழ்ச் சொற்கள் அமைத்திருத்தல் இந்த அடிப்படையிலேதான். நமது அன்னை பிறருக்கு வாரி வாரி வழங்கியிருக்கின்றாள். அதே போன்று பிற மொழிகள் நமக்கு வழங்கியுள்ள வளங்களையும் நாங்கள் மறந்துவிடவில்லை. ஏறக்குறைய

எல்லா மொழிகளுமே எப்போது பிறந்தன என்று கணக்குக் காட்டி விடலாம். ஆயினும் தமிழன்னை என்று பிறந்தவள் என்று யாராலும் சொல்லவே முடியவில்லை. கவிஞர் திருச்சி தியாகராசன் அவர்கள் நம் அன்னையின் பெருமையை அழகுறப் படம் பிடிக்கின்றார் :

"பிறந்த நாளைத் தெரிந்து சொல்ல
எவருமே இல்லை—வயது
பெருகப் பெருக அழகு இன்னும்
குறையவே இல்லை"

என்பது அவருடைய வாக்காகும். இந்த அகராதியின் முதற்பதிப்பு இப்பொழுது வெளிவருகின்றது. இது மேலும் மேலும் வளம் பெற்று வருகின்ற பதிப்புகளிலே செவ்விய தமிழ்ச் சொற்கள் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மொழியிலே எத்தனை நூல்கள் இருக்கின்றன என்ற சரியான கணக்கை யாரேனும் காட்ட இயலுமா ? இயலாது என்று கூறுகிறார் கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் அவர்கள். தமிழ்த்தாய் வாழ்த்தாக அவர் பாடியுள்ள பாடல் சுவைமிக்க பாடலாக மிளிர்கின்றது.

"வானூர்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே
மன்னியமூ வேந்தர்கடம் மடிவளர்ந்த மகளே
தேனூர்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி
கானூர்ந்த தேனேகற் கண்டேநற் கனியே
கண்ணேகண் மணியேஅக் கட்புலம்சேர் தேவி
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே
அம்மேநின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே"

என்று பாடுகின்றார் அவர். கடைசி இரண்டு அடிகளையும் கவனமாகப் பார்க்குமாறு வேண்டுகின்றேன். தமிழ் நூல்கள் கடல்போலக் காட்சியளிக்கின்றன என்னும் கருத்தைத் தெளிவாகக் காட்டுகின்றார் அவர். இத்தனை நூல்களையும் இப் பிறவியிலேயே படித்து முடித்து விடுதல் இயலுமா எனின், இயலாது என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெரிவித்துள்ளது நாலடியார்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து."

இந்தப் பாடலில் ''தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே'' என்று வழி ஒன்றைக் காட்டுகிறது நாலடியார். கற்பவர்களின் நாட்கள் சிலவாக இருப்பதால், நல்ல நூல்களை மட்டும் தேர்ந் தெடுத்து அவற்றை ஐயந்திரிபறக் கற்றுப் பயன்பெறவேண்டும் என்பது நாலடியார் காட்டும் நன்னெறியாகும். அத்துடன் நான் ஒரு சிறிய வேண்டுகோளையும் சேர்க்க விரும்புகின்றேன். அஃதாவது எந்த நூலைக் கற்க நேர்ந்தாலும், அந்த நூலை மீண்டும் ஒரு முறை, கலைச்சொற் கண்கொண்டு நோக்கவேண்டும் என்பதே அந்த வேண்டுகோளாகும். அவ்வாறு நோக்கின் பெரும் புதையல்கள் கிடைக்கும் என்பது திண்ணம்.

இன்றுவரையிலுள்ள நிலைமைகளை எண்ணிப்பார்த்தால், பழைய அகராதிகளே நமது பார்வைக்குக் கிடைத்து வருகின்றன. புதிய அகராதிகள் கிடைப்பதில்லை. சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதி 1926—27ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதன்பின்னர் அந்த அகராதியின் ஒளி நகல் (Photostat copy) அண்மையில் வெளிவந்துள்ளது. அதாவது திருத்தங்களோ புதிய சேர்ப்புகளோ எவையும் இல்லை. இதே போன்று 1965ஆம் ஆண்டு வெளிவந்த ''ஆங்கிலத் தமிழ் அகராதி''யும் மீண்டும் வெளியிடப்பெற்றுள்ளது. இதிலும் புதிய சொற்களும் புதிய மொழிபெயர்ப்புகளும் இடம் பெறவில்லை. இந்த முறையிலேதான் பல்வேறு அகராதிகள் தமிழில் வெளிவந்துகொண் டிருக்கின்றன. அவை யாவும் பிறந்த மேனிக்கே, இருந்த இடத்தி லேயே இருக்கின்றன! ஆமை வேகத்திலே, நத்தை வேகத்திலே கூட அவை நகர்வதில்லை.

ஆங்கில மொழியின் வளர்ச்சியோ முற்றிலும் மாறுனதாகும். ஒவ்வோர் ஆண்டும் புதுப்புது அகராதிகள் வெளிவருகின்றன. பழைய அகராதிகள் திருத்தம் செய்யப்பெற்று ஒவ்வோர் ஆண்டும் கண்ணைக் கவரும் வனப்புடன் வெளிவருகின்றன. துணை அக ராதிகள் தொகுதி தொகுதியாக வெளிவருகின்றன. அழகிய புத்தம்புது அகராதிகள் அன்றாடம் வந்து குவிகின்றன.

இந்த முறையில் தமிழிலேயும் அகராதிகள் வெளிவரவேண் டும் என்பது என் கோரிக்கையாகும். பழைய அகராதிகள் திருத்தப் பெற்று, செப்பம் செய்யப்பெற்று, ஆண்டுதோறும் வெளிவர வேண்டும். அவற்றில், புதிதாகப் புனையப்பெற்ற ஆட்சித் துறைச் சொற்களும், சட்டத் துறைச் சொற்களும், பிற துறைச் சொற்களும் இடம்பெற்று, வளம் கொழிக்க வேண்டும். பாரத ஸ்டேட் வங்கி இந்தப் புதிய அகராதியின் புதிய பதிப்புகளை அடுத்தடுத்து வெளி

யிட்டு அன்னை மொழிக்கு அயராது பணியாற்றும் என்று உறுதியாக நம்பலாம்.

புதிய அகராதியின் பெருமைகளையெல்லாம் போதுமான அளவிற்கு விளக்கிக்காட்டியுள்ளேன் என்று நான் கருதுகின்றேன். ''ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்'' என்னும் முறையில் இன்னும் ஒரு சில சொற்களை மட்டும் உங்கள் முன் வைக்கின்றேன்.

Balance sheet = ஐந்தொகைக் குறிப்பு.

Cell = சிற்றம்

Crossing efficiency bar = திறன் வரை கடத்தல்.

I beg to state = நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

I shall be obliged = நான் மகிழ்வேன்.

Method = வகைப்பாட்டு முறை.

Receipt = கொள்சீட்டு.

Scheme = சமை திட்டம்.

Short credit = விரைவு வரவுகள்.

System = அமைப்பு முறை.

Task Force = விரைவுப் பணிக்குழு.

Tenor of the bill = உண்டியலின் தன்மை.

சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்காமல் கருத்துக்கு மட்டும் முதலிடம் தந்துள்ளோம் என்பதை எளிதில் புரிந்துகொள்வீர்கள்.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்''

என்று கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. ''எச்சம்'' என்னும் சொல்லுக்கு ''மக்கள்'' என்று பொருள் கண்டார்கள் பழைய உரையாசிரியர்கள். இதே சொல்லுக்கு ''இசை'' அல்லது ''புகழ்'' என்று பொருள் கொண்டார்கள் அண்மைக்கால ஆராய்ச்சியாளர்கள். இந்த இரண்டாவது கருத்திற்கு அகச் சான்றுகள் நிறைய இருக்கின்றன. இப்போது நான் வேறொரு பொருள் காண விழைகின்றேன்! ''எச்சம்'' என்பது அவரவர் இயற்றும் அரிய நூல்களாகும்! அந்த வகையிலே இந்த அரிய அகராதியை உங்களின் திருக்கரங்களிலே தவழவிட்டிருக்கின்றோம். தீர்ப்புக் கூறி ஊக்குவீர்களாக! தெள்ளிய சொற்களை அமைக்கும் பணியில் அனைவரும் தோள்கொடுத்து உதவுவீர்களாக!

இந்த அகராதி குறித்து இறுதியாக ஒரு சொல்! சுவைமிக்க பொங்கலைப் போன்றது இந்த அகராதி. புதுமைக் கலைத்துறைகள் யாவும் பொதிந்துள்ள கருவூலமாகும் இது. வங்கிக் கலைச்சொற்களை வகைப்படுத்தி வெளியிட முன்வந்துள்ள பாரத ஸ்டேட் வங்கிக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. உயர்திரு. கபில் தேவ் நய்யார் அவர்களின் புகழ் ஓங்குக. வங்கித்தமிழ் பொங்கிப் பொலிவுபெறுக.

சப்பானிய மொழியில் பாரதியின் குயில்பாட்டு

தமிழ்மொழியின்மீது பேரீடுபாடு கொண்ட சப்பானிய மொழியறிஞர் திரு. சுசோ மட்சுநாகா சப்பானிய மொழியில் தமிழிலக்கியங்களை மொழி பெயர்க்கும் பணியில் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். வான்புகழ் வள்ளுவரின் திருக்குறளை ஆங்கில மொழி பெயர்ப்பின் வழியாக அறிந்த அவர் அதன் பெருமையைக் கண்டு வியந்து சப்பானிய மொழியில் மொழி பெயர்த்து நூலாக வெளியிட்டுள்ளார்.

திருக்குறளின் பெருமையை எடுத்தியம்பும் ஆய்வுக் கட்டுரையொன்றை மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு படித்தார்.

அவ்வமயம் தமிழ்மக்களுடன் நெருங்கிப் பழகினார். அவர்களின் விருந்தோம்பும் பண்பைக்கண்டு மலைத்தார். தாம் திருக்குறளை மொழி பெயர்க்க உதவிய அதன் ஆங்கிலப் பதிப்பை வெளியிட்ட மேனாள் கழக ஆட்சியாளர் தாமரைச்செல்வர். வ. சுப்பையா பிள்ளை அவர்களை அவர் தம் இல்லத்தில் சந்தித்து அளவளாவினார். நாடு திரும்பியபின் தொடர்ந்து கடிதங்கள் எழுதி வந்தார்.

அண்மையில் அவர் பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அவர்தம் நூலொன்றைச் சப்பானிய மொழியில் வெளியிட எண்ணினார். அதன்படி 'குயில்பாட்டை'த் தேர்ந்தெடுத்து மொழி பெயர்த்து அழகாக வெளியிட்டுள்ளார். 106 பக்கங்கள் கொண்ட இந்நூல் சப்பானிய முறைப்படி வலமிருந்து இடமாக அச்சிடப்பெற்றுள்ளது.

பாரதியாரின் சமயப் பாடல்களே அவருக்கு முதலில் அறிமுகப் படுத்தப்பட்டன. சப்பானிய மக்களுக்கு சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் இல்லாத காரணத்தால் அதனைக் கைவிட்டார். இந்நிலையில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய குயில் பாட்டு அவருக்குக் கிடைத்தது. 'காதல் போயின் சாதல், சாதல்' என்ற கருத்து அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. உடனே குயில் பாட்டு முழுவதையும் சப்பானிய மொழியில் மொழி பெயர்த்து அழகிய நூலாக அச்சிட்டுள்ளார். தமிழ்மீதும் தமிழ் இலக்கியத்தின்மீதும் மாறாத பற்றுக்கொண்டுள்ள அவர்தம் அருந்தொண்டு பாராட்டுதற்குரியது.

இந்தப் பொங்கல்.... !

[சிவ. சிவராமலிங்கம், எம். ஏ.]

சிங்களத்து வெறியரெலாம் சீறிப் பாய்ந்து
செழுந்தமிழர் வாழ்விழக்கச் செய்த தீமை
இங்குள்ளார் மனத்தகத்தே ஈட்டி யாக
இன்னல்புரி சமயத்தே வந்த பொங்கல்
செங்கதிரோன் வரக்கண்டு சிதறிப் போகும்
திருட்டிருட்டுப் பகையேபோல் தீங்கொ ழிந்து
மங்கலிலா மனநிறைவும் மகிழ்வும் தந்து
மறுவாழ்வு யாவர்க்கும் மலரச் செய்க.

நீர்வேண்டி நின்றிருந்த பயிர்கள் எல்லாம்
நிலஞ்சாய்ந்து வெள்ளத்து நீரில் மூழ்கக்
கார்பொழிந்து கரையுடைத்துக் கழனி முற்றும்
காட்டுவெள்ளக் காடாகிக் கவலை பொங்க
ஏர்சிறந்த தஞ்சையிலும் திருச்சிக் குள்ளும்
எண்ணரிய சேதங்கள் இயற்கை தன்னால்
ஊர்நடுங்க விளைந்துள்ள நேரந் தன்னில்
ஓடிவந்த இப்பொங்கல் ஓகை யாமோ ?

கழகத்தின் வாழ்வதுவே கடமை யென்று
காலமெல்லாம் தன்னலத்தைக் கருதா ராகிப்
பழகுதமிழ் நூல்பலவும் பதிப்பித் தீந்து
பண்பாடும் சிவநெறியும் காதது வந்தே
அழகமரும் புதுநூல்கள் துறைகள் தோறும்
ஆராய்ந்து வெளியிட்ட அறிவுச் செம்மல்
குழகனருட் சுப்பையாப் பிள்ளை ஆவி
கொடுத்திட்ட ஆண்டொன்றில் வந்த பொங்கல்

கலவரங்கள் இலங்கையிலே தீர்ந்து வாழ்வு
கடல்கடந்த தமிழர்க்குக் கிட்டு தற்கும்
நிலவரங்கள் அறிந்துகொள முடியா வண்ணம்
நீர்சூழ்ந்த தஞ்சைநிலம் சீர்பெ றற்கும்
புலவர்புகழ் சுப்பையாப் பிள்ளை தொண்டைப்
போற்றிச் செய் பெருங்கழகம் பொலிவ தற்கும்
பலவரங்கள் தரவேண்டிப் பரமன் தாளைப்
பணிந்தேத்திப் பரவுவதைப் பணியாக் கொள்வாம்.

———

தொல்காப்பியமும் விகுதிகளும்

[பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

தொல்காப்பிய நூற்பாக்கள் :

தொல்காப்பியம் பால்காட்டும் விகுதிகள்பற்றிப் பலவேறு இயல்களில் குறிப்பிட்டுச் செல்லும். குறிப்பாகக் கிளவியாக்கம், வினையியல் ஆகிய இயல்களில் இவைபற்றி அதிகமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. கிளவியாக்கத்தில் ஐந்து சூத்திரங்களும் (488, 489, 490, 491, 492), வினையியலில் பதினைந்து சூத்திரங்களும் இவை பற்றி நேரடியாகப் பேசும்.

கிளவியாக்கத்தில் படர்க்கை விகுதிகள்பற்றியே பேசப்படு கின்றது. முதலில் ஐந்து சூத்திரங்களில் தமிழ்ப் பெயர்ச்சொற் களைத் திணை, பால் அடிப்படையில் பகுத்துப் பின்னர் அவற்றை வினைச்சொல் எவ்வாறு காட்டுகின்றது எனக் கூறும்போது

"னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" (488)

போன்ற நான்கு சூத்திரங்களில் இவைபற்றிப் பேசுவார்.

இதைப்போன்றே வினையியலிலும் வினைகளை உயர்திணை வினை, அஃறிணை வினை, விரவுத்திணை வினை (சூத். 686) எனப் பகுத்துப் பின்னர் உயர்திணையைச் சார்ந்த வினை, படர்க்கை வினை ஆகிய வற்றைக் குறிப்பிட்டு அவற்றைக் காட்டும் விகுதிகள்பற்றிக் கூறுவார். உயர்திணையைச் சார்ந்த தன்மைவினை விகுதிகளை மூன்று சூத்திரங்களிலும் (687, 688, 689), ஆண்பால், பெண் பால், பலர்பால் விகுதிகளை மூன்று சூத்திரங்களிலும் (690, 691, 692), ஒன்றன்பால், பலவின்பால் விகுதிகளை இரண்டு சூத்திரங் களிலும் (701, 702), விரவுத்திணையைச் சார்ந்த முன்னிலை விகுதிகளை இரண்டு சூத்திரங்களிலும் (708, 709) கூறிச் செல்லுவார். மேலும் 693, 694, 696, 697, 703 ஆகிய சூத்திரங்களும் விகுதிகள்பற்றிப் பேசக் காணலாம்.

கிளவியாக்கமும் வினையியலும் :

கிளவியாக்கத்தில் படர்க்கை விகுதிகள் மட்டுமே பேசப்படு கின்றன என்பதும், ஆனால் வினையியலில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இட விகுதிகளும் பேசப்படுகின்றன என்ப தும் இங்கு நினைவுகூரத்தக்கனவாகும்.

இவை மட்டுமன்றிக் கிளவியாக்கத்தில் உயர் ஒருமை (Honorific singular) பற்றியும் (சூத். 510) பேசுதல் காணலாம்.

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கின சொல்லா றல்ல"

என்ற தொல்காப்பிய நூற்பா இவை "இலக்கண மருங்கின் சொல் லாறல்ல" எனக் கூறிற்று. சங்க இலக்கியங்களில் இத்தகைய உயர்வு காட்டும் விகுதிகள் ஏராளமாக உள்ளன என்பது நினைவு கூரத்தக்கது.

வினையியலிலும், கிளவியாக்கத்திலும் விகுதிகள்பற்றிப் பேசப்படுவது பொருத்தமா என்ற வினவும் எழுவது இயற்கையே. இதற்குக் காரணம் கூறப்புகுந்த தெய்வச்சிலையார் (சூத். 5)

"அஃதேல் வினையியலுள்ளும், 'அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும், ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே' (வினை-சூ. அ) என ஓதுகின்றாராகலின் ஈண்டுக் கூறுவதற்குக் காரணம் என்னையெனின், "வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா" (சூ. கக) என வழூஉக் காக்கின்றாராகலின் அவை வழுவாமற் கூறுங்கால், அச்சொற்களின் இயல்பு அறிய வேண்டுமென்றே, அதற்காக ஈண்டுத் தோற்றுவாய் செய்தாரென்க. ஆண்மைப் பொருண்மைக் கண் வரும் பெயர்ச்சொற்கும், வினைச் சொற்கும் ஈற்றெழுத்துப், பலவுளவாயினும் அவையெல்லாம் கூருது, னகர வொற்றென்றனையுங் கூறினமையானும் தோற்றுவாய் செய்தவாறுணர்க. இவ்வுரை முன் வருகின்றவற்றிற்கும் ஒக்கும்"

எனக் கூறுவது காண்க. இது மட்டுமன்றி வேறொரு காரணமும் கூறலாம். பெயர்ச் சொற்களை இரு திணை ஐம்பாலாகப் பகுத்த பின்னர் அவற்றை எவ்வாறு தெரிந்துகொள்வது என்ற நிலையிலும் இதனைக் கூறவேண்டிய தாயிற்று எனவும் கொள்ளலாம்.

கிளவியாக்கத்தில் தன்மை முன்னிலை குறிப்பிடாமை:

கிளவியாக்கம் தொடர்பு இயைபுபற்றிக் கூறுவது இந்நிலையில் படர்க்கைமட்டுமன்றித் தன்மையும், முன்னிலையும் பேசப்பட வேண்டும். ஆனால் இவைபற்றிக் கிளவியாக்கம் (தன்மைப் பன்மையில் உயர்திணையும், அஃறிணையும் வந்தால் எவ்வாறு என்பது தவிர, (சூத். 43) எதுவும் கூறுவதில்லை. இதுபற்றிக் கூறும் சேனவரையர் (சூத். 11) 'சிறப்புடைப் பொருளைத் தான் இனிது கிளத்தல்' என்பதால் தன்மை, முன்னிலையையும் கொளல்

வேண்டும் என்பார். படர்க்கை சிறப்புடையதால் அதுபற்றிப் பேசப்படுகின்றது என்பது அவர் கருத்தாகும். படர்க்கை எத்துணை அளவுக்குச் சிறப்புடையதோ அத்துணை அளவுக்குத் தன்மையும், முன்னிலையும் சிறந்தனவாகும். எனவே இது காரணமாக இருக்க முடியாது. தொல்காப்பியர் முதல் சூத்திரத்தில் பெயர்ச் சொற்களை உயர்திணை, அஃறிணை எனப் பகுத்துப் பின்னர் அவற்றைப் பலவேறு பால்களாகப் பகுத்த நிலையில் அவை பெயர்ச சொற்களைப்பற்றி மட்டுமே குறிப்பிடுவனவாக உள்ளன. அப்பெயர்கள் அனைத்தும் படர்க்கை என எண்ணிய நிலையில்தான் படர்க்கைக்குரிய விகுதி களைத் தந்து சென்ருர் எனக் கருதலாம். முன்னிலை, தன்மைப் பதிலிடு பெயர்கள்பற்றி எண்ணுத நிலையில் அவற்ருேடு வரும் விகுதிகளையும் அவர் குறிப்பிடவில்லை. உண்மையில் அப் பெயர்ச் சொற்கள் அனைத்தும் படர்க்கையா என்பதும் விவாதத்திற்குரிய தாகும். இத்தகைய பெயர்கள் அனைத்தும் இடம் சுட்டாத பெயர் களே அன்றிப் படர்க்கைக்கே உரியன எனக் கூறமுடியாது. படர்க்கைக்கே உரியனவாயின்,

நீ கண்ணன்

நான் கண்ணன்

போன்ற வாக்கியங்கள் பிழையுள்ளனவாகும்.

ஆனல் பெயரியலில் பெயர்ச்சொற்கள் மட்டுமின்றி எல்லாப் பதிலிடு பெயர்களும் பேசப்படுகின்றன. இந்நிலையில்தான் அவற்ருேடு வரும் விகுதிகள்பற்றி வினையியலில் விரிவாகப் பேசப் படுகின்றது என முடிவு கட்டலாம்.

வினையிலா அல்லது பெயரிலா ?

கிளவியாக்கத்தில் கூறப்படும் இவ் விகுதிகள் வினையில் வருவனவா அல்லது வினையிலும், பெயரிலும் வருவனவா என்ற சர்ச்சை இலக்கண அறிஞர்களிடையே உண்டு.

> "ஈற்றில்நின் றிசைக்கும் பதினேரெழுத்தும்
> தோற்றந் தாமே வினையொடு வருமே" (498)

எனத் தெள்ளத் தெளிவாக வினையோடுதான் வரும் என்று தொல் காப்பியர் கூறியபோதிலும் இவை வினையிலும், பெயரிலும் வரும் என்று அறிஞாகள் சிலர் கருதுவர்.

உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார் ஒழிந்த ஏனைய உரை யாசிரியர்கள் அனைவருமே இவை வினையோடுதான் வரும் எனக் கருதுகின்றனர்.

"னஃகான் ஒற்றே......" (488)

என்ற சூத்திரத்திற்கு உதாரணம் கூறப் போந்த இளம்பூரணர் (சூத். 5) உண்டான். கரியன் போன்ற உதாரணங்களைத் தந்து நிற்பார். இது போன்று னஃகான் ஒற்றுக்கும், "உண்டான்...... கரியன் எனவும் வரும்" என்று கூறுவதோடு "வினையாலும் வினைக் குறிப்பாலும் மகடூஉவை விளக்கியவாறு அறிக" (இளம். 6) என்று குறிப்பிடுவார்.

இதே போன்று னகர இறுதியைப்பற்றிக் குறிப்பிடும்போதும் "னகர இறுதியாய படர்க்கை வினைமுற்றுச் சொல்லால் உயர் திணை ஆண்பால் உணர்த்தப்படும்" (சூத். 5) என்றும் குறிப்பிடுவார்.

மேலும் பத்தாவது சூத்திரத்தில் "வினையொடு வருமே" எனத் தொல்காப்பியர் ஏன் விதந்து கூறினர் என்ற வினவை எழுப்பி அதற்கு விடையாக,

"வினையொடு வருமே என்றார் பெயர்க்கண் திரியவும் நிற்கும், திரியாமையும் நிற்குமாகலான் என்பதும், உண்டான் என்றக்கால் திரிவில்லை. கொற்றன் என்பது இருதிணை யொருமைப் பாற்கும் ஏற்கும் என்பது"

என்று கூறுவார். எனவே இளம்பூரணர் இவ் விகுதிகள் அனைத்தும் வினைச்சொல்லிலேயே வந்து நிற்கும் எனக் கருதுவது வெள்ளிடை மலையாகும்.

இவரைப் பின்பற்றியே சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும் இத்தகைய உதாரணங்களையே தந்து நிற்பர். இளம்பூரணர்—அன்சாரியைக்குப் பின்னர் வரும் விகுதிக்கு உதாரணம் தராதிருக்க, சேனாவரையர் உண்டனன் போன்ற உதாரணங்களைத் தருவார். இதைப் போன்றே வினைக்குறிப்பிற்கும் கரியான் போன்ற—ஆன் ஈற்றுச் சொற்களையும் தருவார். இத்தகைய வேறுபாடுகளை இவர்களிடையே காணலாமேயன்றி அடிப்படையில் இவை வினையில் வரும் என்பதையே இளம்பூரணரும், சேனாவரையரும், பிறரும் கருதுகின்றனர்.

மேலும் சேனாவரையர் பத்தாவது சூத்திரத்தில் இளம்பூரணரைப் பின்பற்றி,

"இவை பெயரொடு வருவழித் திரிபின்றிப் பால் விளக்காமை யின் வினையொடு வரும் என்றார்"

என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

சேனாவரையரைப் பின்பற்றியே நச்சினார்க்கினியரும் வினை, வினைக்குறிப்பு ஆகியவற்றிற்கு உதாரணங்கள் தருவார். சேனா

வரையர் கொடுக்கும் அதே உதாரணங்களையே இவரும் தந்து நிற்பார்.

''வினையியலுள் வினைக்கு ஈறு பற்றி ஓதிப் பெயரியலுள் பெயர்கள் தம்மை எடுத்து ஓதினமையாலும், இப் பதினோரீறும் பெயர்க்கண் திரிபுடையவாய் வருதலானும் பெயர்க்கு இவ்வீறுகள் கோடல் ஆகாமை உணர்க''

எனக் குறிப்பிடுவது இவருடைய முடிபைக் காட்டும். அதே நிலையினைத்தான் கல்லாடனாரிடமும் காணுகிறோம்.

ஆனால் தெய்வச்சிலையாரோ இவ் விகுதிகள் வினையிலும், பெயரிலும் வரும் என எண்ணுவார். எனவேதான் இவற்றிற்கு உதாரணம் தரும்போது ''உண்டான், உண்ணாநின்றான், உண்பான் இவை வினைச்சொல், கரியன், நெடியன் இவை வினைக்குறிப்பு. பாண்டியன், மாயவன் இவை பெயர்'', எனக் கூறுவதிலிருந்து இவை பெயர்க்கும் வரும் என எண்ணுவது விளங்கும். இதே போன்றுதான் எல்லா விகுதிகளுக்கும் பெயரில் உதாரணங்கள் தரமுடியாமல் மயங்கி நிற்பதையும் காணலாம்.

''தோற்றந்தாமே வினையொடு வருமே'' என்ற அடிக்கு விளக்கம் கூறும் முகத்தான் ''தோற்றமாக', என்பது ''பெரிதாக'' என்பது குறித்து நின்றது. எனவே ''பெயரோடு வருதல்'' சிறுவரவிற்று என்று கொள்ளப்படும்'' (சூத். 10) எனக் குறிப் பிட்டுச் செல்லுவார்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் இளம்பூரணர், சேனா வரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியோர் இவ் விகுதிகள் வினையொடு வரும் என்றும், தெய்வச்சிலையார் பெயருடனும் வரும் என்றும் கருதுவர் என்று கருதலாம்.

(தொடரும்)

கருத்துக் கொல்லன்

[வேலூர். ம. நாராயணன் எம். ஏ.]

மூன்று சுவைப் பால்வழங்கும் விந்தைத் தாயாய்
முத்தமிழ்க்கு வாய்த்திருக்கும் அறிவுத் தந்தை
மான்துள்ளும் கானகத்தில் விளைந்தி ருக்கும்
நோய்தீர்க்கும் மூலிகையாய்த் திகழும் மேலோன்
தேன்போலத் தெவிட்டாமல் சுவைக்குந் தோறும்
சிந்தனையைக் கூராக்கும் கருத்துக் கொல்லன்
வான்புகழும் வள்ளுவராம் அவரை வாழ்த்தி
வளம்பெறவே குறள்நெறியைப் பரப்பி வாழ்வோம்.

முழையூர் கோயில் மாடக்கோயிலா?

[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

வரலாறு போற்றும் பழையாறைப் பெருநகரின் ஒரு பகுதியாக இருந்த இடம்தான் முழையூர். இன்று இது சின்னஞ்சிறு ஊராக, சத்தி முற்றத்துக்கு அருகில், கும்பகோணத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

''முல்லைப் புறவம் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றம்''

என்று தொடரும் நாவுக்கரசரின் திருத்தலக்கோவையில் 'முழையூர்' ஒரு வைப்புத்தலமாகக் குறிப்பிடப்படுகிறது.

முழையூரில் உள்ள சிவன் கோயில், இன்று, அருள்மிகு பரசு நாதர் திருக் கோயில் என்று அழைக்கப்படுகிறது. ஆறைவடதளிக்கு மிக அருகில் அமைந்திருக்கும் இக் கோயில், மேற்குப் பார்த்த அமைப்புடையது. எளிமையான மூன்று நிலைக் கோபுரவாயில் வழியே உள் நுழைந்ததும் மையக்கோயில் நம்மை எதிர்கொள்கிறது. வெளித்திருச்சுற்றில் குறிப்பிடும்படி ஒன்றும் இல்லை.

மகாமண்டபத்தின் வடக்குப்புறத்தில் தெற்குப் பார்த்த நிலையில் இறைவியின் கோயில் அமைந்துள்ளது. ஞானம்பிகை அம்மன் என்பது இறைவியின் திருப்பெயர். கருவறை விமானம் இருதள அமைப்புடையது. உட்பகுதிக்குச் செல்ல வாயில் உள்ளது. இப் பகுதியில், கிழக்குப் பார்த்த நிலையில், இடப்புறம் இலிங்கத் திரு மேனிகளும், தேவியுடன் களித்திருக்கும் பிள்ளையார் வடிவமும். வலப்புறம் முருகன் தன் தேவியருடன் நிற்கும் தோற்றமும் காணப் படுகின்றன. இதே மண்டபத்தின் தென்புறத்தில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற மூவர் திருமேனிகளும். வடக்குப் பார்த்த நிலையில் நிறுவப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் இருபுறமும் உள்திருச் சுற்றுத் தொடர்கின்றன.

முன் மண்டபத்தின் வாயிலருகில் வலப்புறத்தில் வைரவர், கதிரவன் திருமேனிகள் காணப்படுகின்றன. இம் மண்டபத்தின் வடபுறம் செப்புத் திருமேனிகளுக்கான திருமுன் காணப்படுகிறது. இது சோமாஸ்கந்தர் திருமுன்னாக இருந்தது. பாதுகாப்பு கருதி அண்மைக்காலத்தில் சோமாஸ்கந்தர் திருமேனியைத் திருச்சத்தி முற்றம் கோயிலுக்குக் கொண்டுபோனதால், இத்திருமுன் இப் போது வெறுமையாக உள்ளது. வட்டமான சிகரமுடைய ஒருதள

விமானம் இத்திருமுன்னை அழகு செய்கிறது. உள்மண்டபத்தை யடுத்த கருவறையில், இறைவன் அருள்மிகு பரசுநாதர் என்ற திருப் பெயருடன் எழுந்தருளியுள்ளார். கருவறை விமானம் திராவிட அமைப்புடையது. உள்மண்டபத்தின் புறச்சுவர்களில் வடபுறம் கொற்றவையும் தென்புறம் ஆடல் விநாயகரும், பிள்ளையாரும் காணப்படுகின்றனர். வடபுறத்தில் இன்னொரு கோட்டத்தில் காணப்படும் சிற்பம் இன்னதென ஊகிக்க முடியாதபடி பொரிந்து போயுள்ளது. கருவறையின் புறச்சுவர் கோட்டங்களில் வடபுறம் நான்முகனும், தென்புறம் தென்திசைக் கடவுளும், கிழக்கில் அம்மை யப்பரும் காணப்படுகின்றனர். கருவறையின் பின்புறச் சுவரில் அமைந்துள்ள கோட்டத்தில் அம்மையப்பர் காணப்படுவது இக் கோயி லின் தொன்மையைக் குறிக்கிறது.

இந்த அம்மையப்பரின் சிற்பம் நான்கு கைகளுடன் அமைந் துள்ளது. வலப்புற முன்கை காளையின் நெற்றியின்மீது வைக்கப் பட்டுள்ளது. பின்கையில் கோடாரி காணப்படுகிறது. இடப்பக்க முன்கை கத்யவலம்பித முத்திரையில் உள்ளது. இடப்பக்கப் பின்கை யில் தாமரை மொட்டு உள்ளது. காளையின் முகம் இறைவனின் பக்கம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. திருச்சியிலுள்ள உறையூர் தான்தோன்றீசுவரத்திலும் மேற்குக் கோட்டத்து அம்மையப்பர் சிற்பம் இதே அமைப்பு முறையைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலின் செப்புத் திருமேனிகளுள் சோமாஸ்கந்தமூர்த்தி மிக அழகு வாய்ந்தது. சோழர் காலத்துப் படிமமாகக் கருதப்படும் இத் திருமேனி வார்ப்புக் கலையின் உயரிய நிலை எனலாம். இறை வனின் கருணை பொலிந்த முகத்தோற்றம் காண்போரைக் கனிய வைக்கும். இறைவியின் எளிதாக அமர்ந்த திருக்கோலத்தில், தம்மையிழக்காதார் இருத்தல் இயலாது.

இக்கோயிலில் கல்வெட்டுகள் ஏதும் காணப்படாமை பெருங் குறையே. இப்போதிருக்கும் கட்டடம் மிகப்பிற்பட்ட காலத்தில் சீரமைக்கப்பட்டதாகும்.


''முழையூர்' என்னும் தலத்தைப்பற்றி இரண்டு நூலாசிரியர்கள் இருவேறுபட்ட கருத்துகளைக் கூறுகிறார்கள். அவற்றினை ஒவ்வொன் றையும் காண்போம்.

திரு. வே. மகாதேவன் தம்முடைய 'வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர்' என்னும் நூலில் முழையூரைப்பற்றிக் கீழ் வருமாறு குறிப்பிடுகிறார்:[1]

---

1. வரலாற்றுப்போக்கில் பழையாறை மாநகர்—திரு. வே. மகா தேவன். பக். 78.

முழையூர் பரசுநாதர் திருக்கோயில்



முழையூர்
அருள்மிகு பரசுநாதர் திருக்கோயில்



பரசுநாதர் கோயில்
கோட்ட அம்மையப்பர் தோற்றம்

''முழையூரில் தொன்மையான சிவாலயங்கள் இல. இவ்வூரில் உள்ள சிவாலயத்தில் சோழர் காலத்தைச் சார்ந்தனவாகிய அழகிய சிற்பங்கள் உள்ளன.''

இந்த வரிகளைப் படிக்கும்போது, தற்போது முழையூரில் உள்ள பரசுநாதர் திருக்கோயில் பழைமையான கோயில் அன்று என்பது போலவும், இங்குள்ள சோழர் காலத்துச் சிற்பங்கள் இக் கோயிலைச் சேர்ந்தவையல்ல என்பது போலவும் ஒரு கருத்து பிறக்கிறது. இது எத்துணை முரணான கருத்து என்பதை ஆராய்வோம்.

நாவுக்கரசர் பெருமான் குறிப்பிடும் வைப்புத்தலங்களுள் முழையூரும் ஒன்று. பரசுநாதர் கோயில்பற்றிய செய்திக் குறிப்புகளில் இதுவே நாவுக்கரசர் குறிப்பிடும் முழையூர் கோயில் என்று காணப்படுகிறது. இந்த ஆலயத்தைத் தவிர முழையூரில் வேறு ஆலயங்கள் கிடையாது. பெரும்பாலான பாடல்பெற்ற தலங்கள் சமய குரவர்கள் காலத்தில் செங்கல் தளிகளாகவே இருந்தமை வரலாற்று உண்மை. அவற்றில் பெரும்பான்மையன சோழர்கள் காலத்தில்தான் கற்றளி யாக்கப்பட்டன. இந்தப் பகுதியில் உள்ள முதலாம் ஆதித்தன் காலத்துக் கோயில்களான பழையாறை சோமநாதர் கோயில், குடந்தை நாகேசுவரர் கோயில் போன்றவற்றில், கருவறைப் புறச் சுவரின் பின்பகுதிக் கோட்டத்தில் அம்மையப்பர் காணப்படுவது போலவே, இக் கோயிலிலும் அக் கோட்டத்தில் அம்மையப்பர் வடிவம் காணப்படுகிறது.

சோழர் கலைமுறையை ஆய்ந்து தெளிந்த கலையறிஞர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் 'பெரும்பாலும் கருவறைக்குப் பின் உள்ள கோட்டத்தில் திருமால் சிலை காணப்படுவது பழைய மரபாகும். முதல் ஆதித்தன் காலத்தில் திருமால் இருக்க வேண்டிய இடத்தில் பெரும்பாலும் பெண்ணொருபாகர் (அம்மையப்பர்) இடம் பெற்றார். முதல் பராந்தகன் காலத்தில் இலிங்கோத்பவருக்கு அவ்விடம் வழங்கப்பட்டது. ஒருசில இடங்களில் திருமாலும் இடம் பெற்றிருக்கிறார்' என்று குறிப்பிடுவதைக் காணலாம்.[2]

சோழர் கலைமுறையில் ஆழமான அறிவுத்திறம் வாய்ந்த அறிஞர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களின் கருத்துப் படி பார்த்தால், கருவறையின் பின்புறக் கோட்டத்தில் அம்மையப்பர் இடம் பெறும் கோயில்களை, அவை வேறு மன்னர்களால் தோற்று விக்கப்பட்டமைக்கான புறச்சான்றுகள் எதுவும் இல்லாத நிலையில்,

உ. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்.—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பக். 401-402.

முதலாம் ஆதித்தன் காலத்துக் கோயில்களாக வரையறுக்கலாம். இந்நிலையில், பின்புறக் கோட்டத்தில் அம்மையப்பர் வடிவத்துடன் இலங்கும் பரசுநாதர்கோயிலைக் கற்றளியாக்கும் முயற்சியில் ஈடு பட்டவன் முதலாம் ஆதித்தசோழனே எனத் துணிவதில் தவறொன்றும் இருக்கமுடியாது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அப்பர் பாடிய இக்கோயிலை கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ஆதித்தன் திருப்பணி செய்துள்ளான். குடந்தைக் கீழ்க்கோட்டம், பழையாறை சோமநாதர்கோயில் போன்றனவும் இதேபோல் அப்பரால் குறிக்கப் பெற்று ஆதித்தனால் திருப்பணி செய்யப்பட்டவை.

இப்போதிருக்கும் கோயில் காலத்தால் மிகவும் பிற்பட்ட அமைப்பாகும். ஆதித்தன் காலத்துத் திருப்பணி சிதிலமாகிப் பிற்காலத்தில் இக் கோயில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கலாம். நன்னிலம் மதுவனேசுவரர் கோயிலும் இதுபோல் பல திருப்பணிகள் கண்ட, ஆதித்தன் காலத்துக் கோயிலாகும். முழையூர் கோயில் சோழமன்னர்களால் போற்றப்பட்டது என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் ஏதும் இல்லையென்றாலும் இக் கோயிலுக்குரியதாகக் காணப்படும் செப்புத்திருமேனிகள், அவ்வுண்மையை நிறுவுகின்றன. மிக அழகான சோமாஸ்கந்தர் திருமேனி ஓர் அற்புதமான சோழர் காலப் படைப்பாகும். இங்குள்ள சிற்பங்களுள் சிலவும் சோழர் காலத்துத் திறன் கொண்டவை.

இக் கோயிலைப்பற்றிக் குறிப்பிடும் இன்னொரு நூலாசிரியர் திரு. சி. கே. சுப்பிரமணியமுதலியார் ஆவார். அவர் தம்முடைய திருத் தொண்டர் புராண உரையின் முதல் பகுதியில் அமர்நீதி நாயனார் புராணத்தில், தலவிசேடம் குறிக்கும் இடத்தில் ஆறை வடதளி, மேற்றளி, இவற்றைக் குறித்துவிட்டு இம் முழையூரைப்பற்றியும் கூறுகிறார்.

'காமதேனுவின் இன்னொரு புத்திரி நந்தினி பூஜித்த முழையூர் என்ற வைப்புத்தலமாகிய மாடக்கோயில் அடுத்துள்ளது'

'திருப்பட்டீச்சரத்தையடைந்து கிழக்கே ஒரு நாழிகை சென்றால் முழையூரை அடையலாம். இதற்குக் கால் நாழிகையளவில் வடதளி யும், அதற்குத் தென்கிழக்கில் ஒரு நாழிகையளவில் திருப் பழையாறையும் உள்ளன' இதில் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் இரண்டு கருத்துகளை வெளிப்படுத்துகிறார்.

1. 'முழையூர்' என்னும் வைப்புத்தலம் இன்றும் உள்ளது. இது ஆறை வடதளிக்குக் கால்நாழிகையளவிலும், பழையாறைக் கோயிலுக்கு ஒரு நாழிகையளவிலும் உள்ளது.

2. முழையூரில் உள்ள வைப்புத்தலம் மாடக்கோயில் அமைப்புடையது.

ஆறைவடதளிக்கு அருகிலும், பழையாறைக்கு நெருக்கத்திலும் உள்ள நிலையில் முழையூரில் காணப்படும் ஒரே சிவன்கோயில் அருள்மிகு. பரசுநாதர்கோயில்தான். இக் கோயிலைத்தவிர வேறு கோயிலே முழையூரில் இல்லையென்னும் நிலையில், திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் நாவுக்கரசர் பாடிய, முழையூர் என்னும் வைப்புத்தலமாகக் கருதுவது இக் கோயிலைத்தான் எனக்கொள்வதில் தவறேதும் இருக்கமுடியாது. எனவே, முழையூர் பரசுநாதர் கோயில் தான் நாவுக்கரசர் பாடிய வைப்புத்தலம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆனல், திரு. முதலியார் அவர்கள் முழையூர் கோயிலை மாடக் கோயில் என்று குறித்திருப்பது சரியன்று. இக் கோயில் மற்றக் கோயில்களைப் போல தரைமட்டத்தில் அமைந்த கோயில்தான். இதற்கருகில் இருக்கும் ஆறைவடதளிதான் மாடக்கோயில். மாடக் கோயிலின் அமைப்பு முறை பற்றிப் பலர் பலவித கருத்தினைக் கொண்டிருக்கின்றனர். அவற்றுள் பெரும்பான்மையான கருத்துக் கள் தவருனவை. மாடக்கோயில் என்பது கீழ்நிலையில் கருவறை யின்றி மேல்நிலையில்மட்டும் கருவறை அமையப்பெற்ற கோயி லாகும்.[3]

பரசுநாதர்கோயில் இந்த அமைப்புமுறையைப் பெறவில்லை. இது தரைமட்டத்தில் அமைந்திருக்கும் எளிய கோயிலாகும். சிகரம் திராவிட வகையில் அமைந்த கோயிலாகும். இதைத் திரு. முதலியாரவர்கள், எந்த அடிப்படையில் மாடக்கோயிலாகக் குறித்தார் என்பது புதிராக உள்ளது. பெரிய புராணத்திற்கு உரையெழுதி, அதில் வரும் தலங்களையெல்லாம் நேரில்கண்டு, அவை எங்குள்ளன, எந்நிலையில் உள்ளன, எப்படி அவற்றை அடையலாம் என்பதற் கெல்லாம் விளக்கம் குறித்த பெருமகனர் திரு. சுப்பிரமணிய முதலியாரவர்கள், எத்தனையோ தலங்களைக் கண்டு எழுதும்போது இதுபோல் சிறு கவனக்குறைவுகள் நிகழ்வது இயற்கையே. எனவே, இதைப் பொருட்படுத்தாமல், நாவுக்கரசர் குறித்த முழையூர் திருத் தலம் பரசுநாதர் கோயிலென்றும், அது மாடக்கோயில் அமைப் புடையதன்று என்றும் முடிவு கொள்வதே பொருத்தமானதாகும்.

———

3. தமிழகக் கோயிற்கலைகள்,—டாக்டர் இரா. நாகசாமி. பக். 47. மலைக்க வைக்கும் மாடக்கோயில்கள்,—டாக்டர் இரா. கலைக்கோவன்.

சிதம்பர இரகுநாதன் அவர்கட்கு சாகித்திய அகாடமி விருது

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவரான சிதம்பர இரகுநாதன் அவர்கள் எழுதிய "பாரதி: காலமும் கருத்தும்" என்னும் நூலினைப் பாராட்டி சாகித்ய அகாடமி 1983ஆம் ஆண்டிற்குரிய விருதினை வழங்கியுள்ளது.

திரு. தொ. மு. சிதம்பர இரகுநாதன் அவர்கள், 1923-ல் திருநெல்வேலியில் பிறந்தார். புதினம், கவிதை, இலக்கியத் திறனாய்வு, ஒப்பிலக்கியம் போன்ற முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். மொழிபெயர்த்தும் பல நூல்களை உருவாக்கியுள்ளார். இவர் தமிழாக்கம் செய்துள்ள நூல்களுள் மாக்சிம் கார்க்கியின் "அன்னை" குறிப்பிடத்தக்க நூலாகும். பெருங்கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றிச் சில ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். அவை, கங்கையும் காவிரியும், பாரதியும் ஷெல்லியும், பாரதி—சில பார்வைகள், பாரதி—காலமும் கருத்தும் என்பனவாகும். இவற்றுள் பாரதி—காலமும் கருத்தும் என்னும் நூலுக்குத்தான் இப்போது விருது வழங்கப்பட்டுள்ளது. முன்னரே ஒருமுறை—அஃதாவது 1982இல், இலக்கிய சிந்தனை விருது என்ற பெயரில் இதே நூலுக்கு விருது வழங்கப்பட்டது.

இவர் திருச்சிற்றம்பலக் கவிராயர் என்னும் புனைபெயரில் பல கவிதைகளை எழுதியுள்ளார். இவர் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் அவர்களின் இளவல் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. இப்போது இவருக்கு அளிக்கப்படும் சாகித்ய அகாடமி விருது 10 ஆயிரம் வெண்பொற்காசுகளும் ஒரு செப்புப் பட்டயமும் ஆகும். விருதுபெறும் திரு. சிதம்பர இரகுநாதன் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து இலக்கியப்பணி ஆற்ற இறையருள் கூட்டுமாக என வாழ்த்துகின்றோம்.

புதுமைப் பொங்கல்

எல்லோரும் இன்புற்று வாழ்தல் வேண்டின்
இந்நாளைப் பொங்கலிலோர் புதுமைவேண்டும்!
பல்லாண்டாய் நம்மிடையே ஊறிப் போன
பயனில்லாப் பழக்கங்கள் விறகாய் மாற
பல்லாற்றல் பகுத்தறிவுக் கனலும் மூள
நல்லாட்சி என்னுமொரு பாலும் பொங்க
சொல்லாட்சி சுவைத்தமிழாய் நாளும் பொங்க
எல்லார்க்கும் எல்லாமென் றினிது வாழ்வோம்!

—நாகை வேலன்

செய்திகள்

தனித்தமிழ் இலக்கிய மாநாடு

புதுவை தனித்தமிழ்க் கழகத்தார் தனித்தமிழ் இலக்கிய மாநாடு தி. பி. 2015 என்ற பெயரில் விரைவில் ஒரு மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இதன் தொடர்பாகத் தனித்தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? என்ற நூலொன்றை எல்லா விவரங்களுடனும் வெளியிடவும், தனித்தமிழ் நூற்காட்சி, அறிஞர்களின் படக்காட்சி ஆகியன இடம்பெறச் செய்யவும் முடிவு செய்துள்ளனர். படங்களையும், படைப்புகளையும் அனுப்பிவைப்பதோடு, பொருளுதவியும் செய்யுமாறு இக்கழகத் தலைவர் திரு. க. தமிழ்மல்லன், க.இ., கல்.இ. அவர்கள் ஓர் அறிக்கைமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். விவரம் வேண்டுவோர், பொருளாளர் தனித்தமிழ்க் கழகம், 168, மாரியம்மன்கோயில் தெரு, தட்டாஞ் சாவடி, புதுச்சேரி என்னும் முகவரிக்கு எழுதுக.

பாம்பன் குமரகுருதாச அடிகள் ஆலயம்—மயூரவாகன சேவன மணிவிழா

25—12—1983 முதல் 31—12—83 முடிய திருவான்மியூரில் பாம்பன் அடிகள் ஆலயத்தில் நூறுயிரம் அருச்சனைப் பெருவிழாவும் 3, 4—1—84ஆம் நாள்களில் ஐந்தமுது திருமுழுக்கும், சிறப்பு வழிபாடும் முறையே நடைபெற்றன. இவ் விழாவினையொட்டி சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் சொற்பொழிவும், இசை வல்லுநர்களின் இசை அரங்குகளும் நடைபெற்றன. பாம்பன் அடிகள் அருளிய "அசோக சால வாசகம்" என்னும் நூலிலிருந்து, அடிகளார் கண்ட பொன்மயில் காட்சியினை விளக்கும் ஐந்தாம் பத்து பாடல்கள் கொண்ட பதிவுக் கல்லும் அமைக்கப்பெற்றது.

சிவஞான சித்தியார் வகுப்பு நிறைவு விழா

விக்கிரம சிங்கபுரம் சைவநெறிக் கழகச் சார்பில் 6—5—1981 முதல் ஞாயிறுதோறும், மாதவச் சிவஞான முனிவர் திருக்கோயிலில், சங்கரன்கோயில் சித்தாந்தச் செம்மல் புலவர் திருமிகு. ச. இரத்தினவேலன் அவர்களால் நடத்தப்பட்டு வந்த சிவஞான சித்தியார் சாத்திர வகுப்பின் நிறைவு விழா 1—1—84 மாலை 6 மணி முதல் 9 மணி வரை நடைபெற்றது. சைவநெறிக் கழகத் தலைவர் திருமிகு. மு. சிவசைலம் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார். சைவ மெய்யன்பர்கள் ஒன்பதின்மர் வாழ்த்துரை வழங்கினர்.

புலமை ஆய்வு வட்டம்

30—12—83 மாலை சென்னை ஆழ்வார்பேட்டை புலமை ஆய்வு வட்டத்தின் சார்பில் மயிலை சீனிவாச சாத்திரி மண்டபத்தில் முனைவர் இரா இளவரசு அவர்கள் தலைமையில் முனைவர் பொற்கோ அவர்கள் "தமிழுணர்ச்சியும் தமிழ் வளர்ச்சியும்" என்னும் பொருள்பற்றி உரையாற்றினர்.

"தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும்" நூல் வெளியீட்டுவிழா

டாக்டர் அந்தனிஜான் அழகரசன் அவர்கள் எழுதிய "தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும்" என்னும் நூல் வெளியீட்டுவிழா 13—1—84 வெள்ளிக்கிழமை மாலை, சென்னை பிராட்வே நெடுஞ்சாலையை யொட்டியுள்ள பிடாரியார் கோயில் தெரு, 31 என்னுள்ள சகாயமாதா சமூகக்கூடத்தில் நடைபெறும். கழக ஆட்சியர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார்கள். மயிலைப் பேராயர் மேன்மைதங்கிய ஆர். அருளப்பா ஆண்டகை அவர்கள் தலைமையுரை நிகழ்த்துவார்கள், தமிழக, செய்தி அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் நூலினை வெளியிடுவார்கள். மற்றும், டாக்டர் எஸ். ஜே. இராசமாணிக்கம், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் பொற்கோ, டாக்டர் தயானந்தம் பிரான்சிஸ் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். நூலாசிரியர் டாக்டர் அந்தனிஜான் அழகரசன் நன்றி நவில்வார்.

ஆ. தி. அ. ஈசுவர் அவர்களின் சமயச் சொற்பொழிவுகள்

பல்லாவரத்திற்கண்மையிலுள்ள பொழிச்சலூர் அருள்மிகு ஆனந்தவல்லி உடனுறை அகத்தீசுவரர் திருக்கோயிலில் இம் மார்கழித் திங்கள் முழுமையும் காலை 6-30 மணி முதல் 8 மணி வரை "சண்டமாருதம் பிரசங்க ரத்னகரம்" ஆ. தி. அ. ஈசுவர் அவர்கள் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி விரிவுரை நிகழ்த்துகிறார். அன்பர்கள் கேட்டு இன்புறுவார்களாக. பெரியபுராணச் சொற்பொழிவு: 1984 சனவரி 29ஆம் நாள் முதல் பல்லாவரம் மறைமலையடிகள் கலைமன்றத்தில் திரு. ஈசுவரனாரின் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு ஞாயிறுதோறும் நடைபெறும்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ருஅ, கஉ௬சு ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5 00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5 00
திரு. A T. A. ஈஸ்வர் அவர்கள்	5 00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
செல்வி சாந்தி, சென்னை	25 00
எம். எஸ். எஸ். முருகன், சென்னை-17. (இளவல் அரிகரன் திருமணத்தை முன்னிட்டு)	11 00

மதிப்புரை

சிலம்பிற் பிழையா ?

[ஆசிரியர்: திருக்குறள் மணி புலவர் இறைக்குருவனார், தமிழ்க் கொடி பதிப்பகம், 88, தம்புச் செட்டி தெரு, சென்னை-600 001, விலை: உரு. 4-00]

தமிழ் இலக்கியங்களுள் சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பியது சிலப்பதிகாரம். எனவே, இது புலவர் பெருமக்களின் திறனாய்வுக்கு இலக்காவதில் வியப்பில்லை. ஆனால் அங்ஙனம் திறனாய்வு செய்யுங்கால் நூலில் காணும் குற்றங்குறைகளை எடுத்தியம்பும்போது அவற்றிற்குரிய சான்றுகளையும் கற்றோர் உளங்கொள எடுத்தியம்புதலே சாலப் பயனுடையதும் பொருத்தமுமாகும். அஃதின்றேல் அவை எதிர்க்கருத்துகட்கு இலக்காக நேரிடும்.

சிலப்பதிகாரத்தில் குறை இருப்பதாகவும், அதற்குக் கரணியம் இளங்கோவடிகளாரின் மறதியே எனவும் சிலர் கூறியதும், அதனை வழிமொழிதல் போல் கற்றுத்துறை போய வேறு சிலரும் பேசியும் எழுதியும் வந்தமையே புலவர் இறைக்குருவனாரவர்கள் ''சிலம்பிற் பிழையா?'' என்னும் இந்நூலைப் படைத்தற்கு ஏதுக்களாயின. 'தென்மொழி' இதழில் புலவரவர்கள் எழுதிவந்த மறுப்புக் கட்டுரைகளின் தொகுப்பே இச் சிறு வெளியீடு. இஃது அளவில் சிறியதேயாயினும் கருத்தில் அரியது.

கோவலன் வெட்டுண்டு கிடந்தமையும், கண்ணகி கொலைக் களஞ் சென்று அவனைக் கண்டதும் இருநாள் நிகழ்ச்சிகள் என்பது சிலம்பிற் பிழைகாண்போரின் கூற்று. கதை அமைப்பின்படி இவை ஒருநாள் நிகழ்ச்சிகளே என்பது புலவர் இறைக்குருவனாரின் கருத்து. தம் கருத்தை விளக்குதற்குப் புலவரவர்கள் அடுக்கடுக்காகச் சான்றுகளை எடுத்துக் காட்டுகிறார். தாமே வினாக்களை எழுப்பி விடையும் தருகிறார். அவற்றை விரிக்கின் பெருகும். புலவரவர்கள் மதிநுட்பம் நூலோடுடையராதலால், மிக அமைதியாக, அதேபோதில் ஆணித்தரமாகத் தமது கொள்கையினை நிலைநாட்டும் பாங்கு வியந்து பாராட்டற்குரியது. சுருங்கச் சொல்ல வேண்டுமாயின், இலக்கியம் பயில்வார்க்கும், திறனாய்வாளர்க்கும் நூல்பயில் முறையை எடுத்துக் காட்டும் நல்லதொரு வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது ''சிலம்பிற் பிழையா?'' என்னும் இந்நூல் எனலாம்.

ஊஞ்சல் இலக்கியம்

[பதிப்பாசிரியர்: த. அழகப்பராசு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், டி. டி. டி. ஐ., தரமணி, சென்னை—600 113, விலை: உரு. 10/-, பக்கங்கள்: 24 :.216].

சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் 'ஊஞ்சல்' பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ஊஞ்சல், ஊசல் என்பன ஒரு பொருளன. இலக்கியங்களில் மட்டுமன்றி, நாட்டுப் புறப் பாடல்களிலும் ஊஞ்சல் பாடல்களைக் காணலாம். ஆடிமகிழும் காட்சிகளிலும் ஊஞ்சல் இடம்பெறுகிறது. இங்ஙனம் 'ஊஞ்சல்' ஓர் இலக்கிய

மாகவே திகழ்வதை உணர்ந்த இந்நூலாசிரியர் அரசினர் கீழ்த் திசைச் சுவடிகள், ஆதிநாதர் ஊஞ்சல் சுவடி, சடகோபர் ஊஞ்சல் சுவடி, வைத்தமாநிதிப் பெருமாள் ஊஞ்சல் சுவடி, மதுரகவி யாழ்வார் ஊஞ்சல் சுவடி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகள், கோயில் வெள்ளாற்றுச் சுவாமி அம்மன் ஊஞ்சல் சுவடி, தரும புரம் தேனமிர்தநாயகி ஊஞ்சல்சுவடி, திருக்கோவலூர் பெரியநாயகி யம்மன் ஊஞ்சல், ஆறுமுக தேசிகர் ஊஞ்சல் சுவடி, திருவனந்தபுரம் அரசினர் கீழ்த்திசை நூலகச் சுவடிகள் ஆகியவற்றின் துணை கொண்டு இந்த ஊஞ்சல் இலக்கியத்தை உருவாக்கியுள்ள திறம் வியந்து பாராட்டத்தக்கது. எனினும் இந் நிறுவனத்தார் தம்முடைய வெளியீடுகளை அச்சுப்பிழையின்றி வெளியிடுவதில் அதிக கவனம் செலுத்துதல் நல்லது.

சிந்தனைச் செல்வம் (வானொலிப் பேருரைகள்)

[ஆசிரியர்: தவத்திரு. குன்றக்குடி அடிகளார், ஸ்ரீகலைவாணி புத்தகாலயம், 69, முத்தையா முதலத் தெரு, வேளாளர் தேனும் பேட்டை, சென்னை-86, விலை: உரு. 9-00.]

சமயத் தலைவர்களுள் குன்றக்குடி அடிகளார், சமய மரபு என்ற தளையினை அறுத்தெறிந்து சமுகாயத்தின் நலத்திற்குரியதே சமயம் என்னும் பெருநோக்குடன் காலத்திற்கேற்ற புரட்சிக் கருத்துகளைப் பரப்பிவருபவர். அத்தகைய அறிஞர் அவ்வப்போது வானொலியில் ஆற்றிய பேருரைகளின் தொகுப்பே இந்நூல். இதில் 28 கட்டுரைகள் அடங்கியுள்ளன. இறுதிக் கட்டுரையின் தலைப்பே நூலின் தலைப்பாக அமைந்துள்ளது. பிற கட்டுரைகள் அனைத்தும் திருக்குறள் கருத்து களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பவை. மாணவருலகிற்குப் பெரிதும் பயன் தரத்தக்க கட்டுரைகள்.

சிவஞான போதம்—மூலமும் பதவுரையும்

[ஆசிரியர்: திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்., சேக்கிழார் பதிப்பகம், 8-ஏ, சந்நிதித் தெரு, வட திருநாகேசுவரம், குன்றத்தூர், சென்னை-69, விலை: உரு. 15-00.]

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினுன்கனுள். சைவசித்தாந்தக் கருத்துகளைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது சிவஞான போதம் ஆகும். பன்னிரண்டே சூத்திரங்களையுடைய இந்நூலுக்குச் சிவஞான முனிவர் சிற்றுரையும் பேருரையும் எழுதியுள்ளார். எனினும் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளப் பலர் இடர்ப்படு கின்றனர். அவ்விடர்ப்பாட்டினைத் தவிர்க்கும் வகையில், இந் நூலாசிரியர் பதவுரையும் விளக்கவுரையும் எழுதியிருப்பது கண்டு மகிழ்ந்து பாராட்டுகிறோம். சிவஞான போதம் போன்ற அரிய சமய சாத்திரங்கட்கு இதுபோன்ற விளக்க நூல்கள் வெளிவரின் விரும்பிப் படிப்போர் தொகை மிகுதியாகும். சைவ சமயத்திற்கு ஆசிரியர் ஆற்றியிருக்கும் இப் பணி அரும்பணியாகும்.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை, அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிட்.

பதிவு எண் : 4899 Jan 1984

அப்பர் அச்சகம், சென்னை-108.